# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்


வார இதழ் – இலவசம்

வெள்ளி, நவம்பர் 13, 2019 இதழ் – 83










ஆதலால் அனைவரும் வாக்களியுங்கள்...

பக்கம் - 03



ஜனாதிபதி தேர்தலையொட்டி கல்லடியில் மையம்கொள்ளும் மாற்றம்

பக்கம் - 05



நவீனகால மதியூகி சுமந்திரனுக்கு ஒரு கடிதம்

பக்கம் -10



அறிவாலயம் அறக்கட்டளை நம்பிக்கை நிதியத்தின் ஆக்கபூர்வமான செயற்பாடுகள்

பக்கம் - 03




## ‘இரண்டாம் கட்ட வாக்குகள் எண்ணும் நிலை ஏற்பட்டால் தேர்தல் முடிவுகள் திங்கட்கிழமையே வெளிவரும்’

--- நி.அமர்தஸன் ---

இம்முறை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் முப்பத்து ஐந்து வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இதனால் வாக்குகளை எண்ணும் நேரம் மேலும் அதிகரிக்கலாமென சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேப்பிரிய தெரிவித்துள்ளர்.

பிரதான வேட்பாளர்களுக்கிடையே கடும் போட்டி ஏற்பட்டு அவர்கள் வெற்றிபெறுவதற்கான வாக்கு வீதம் போதியதாக இல்லையென்றால் இரண்டாவது கட்ட வாக்குகளை எண்ண வேண்டும் என்றும், அப்படியான நிலை ஏற்பட்டால் தேர்தல் முடிவுகள் திங்கட்கிழமை பதினெட்டாம் திகதி நண்பகல் அளவிலேயே வெளிவரும் எனவும் மகிந்த தேசப்பிரிய கொழும்பில் செய்தியாளர்களிடம் கூறினார்.

இதேவேளை பாதுகாப்புக்காக பொலிஸார் வரவழைக்கப்பட்டுள்ளனர் என்றும் முப்படையினரும் பிரதான நகரங்களில் காவல் கடமைகளில் ஈடுபடுவார்கள் என்றும் கூறிய மகிந்த தேசப்பிரிய முறைப்பாடுகளை உடனுக்குடன் பதிவு செய்வதற்கு விசேட கருமபீடங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

பொதுநலவாய நாடுகளின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாகவும் அவர்கள் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார்கள் எனவும் மகிந்த தேசப்பிரிய கூறியுள்ளார். உள்ளூர் கண்காணிப்பாளர்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் சில தினங்கள் இருக்கும் நிலையில் தேர்தல் சட்டமீறல்கள் தொடர்பாக இதுவரை 3627 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக சுயாதீனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

வன்முறைகள் கூடுதலாக இடம்பெறலாம் எனக் கருதப்படும் பிரதேசங்களில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழுத் தகவல்கள் கூறுகின்றன.

## கல்முனை வடக்கு பிரதேச செயலகம் கட்டாயம் தரமுயர்த்தப்படும்.! கல்முனையில் பசில் ராஜபக்ச உறுதி!



(காரைதீவு நிருபர் சகா)

கல்லடியில் மகிந்த ராஜபக்ச உறுதியளித்தது போன்று கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்திற்கு தீர்வுகாணப்பட்டு கட்டாயம் அது தரமுயர்த்தப்படும் என்பதை நானும் உறுதியாகக் கூறுகின்றேன் என என பசில் ராஜபக்ச தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபாய ராஜபக்சவுக்கு ஆதரவு தெரிவித்து கல்முனை நற்பிட்டிமுனை, சுமங்கலி மண்டபத்தில் முற்போக்கு தமிழர் அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த திங்கட்கிழமை மாலை நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான வியாளேந்திரன், விமலவீர திசாநாயக்க, சிறியானி, முன்னாள் மாகாணசபை உறுப்பினர் பிரசாந்தன் மற்றும் அருண் தம்பிமுத்து, உட்ப பல அரசியல் பிரமுகர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

அடுத்த கூட்டம் காரைதீவில் நடைபெற்றது.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோயாளர்கள் அதிகரிப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் பெய்த கனமழையினால் ஏற்பட்ட வெள்ளம் வடிந்து வருகின்ற நிலையில் டெங்கு நுளம்பு தாக்கம் அதிகரித்து வருகின்றது. அந்தவகையில் கடந்த ஒக்டோபர் 26ம் திகதி தொடக்கம் நவம்பர் 1ம் திகதிவரையும் 74பேர் டெங்குநோய் தாக்கத்திற்குள்ளாகியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 2019ம் ஆண்டு ஜனவரி 1ம் திகதியில் இருந்து இதுவரை 1237 பேர் டெங்குத் தொற்றுக்கு ஆளாகி

தொடர்ச்சி பக்கம் 15

## ஜனாதிபதி ஊடகவிருது சான்றிதழ் பெற்ற ஊடகருக்கு கௌரவம்!



காரைதீவு ஹொக்கி லயன்ஸ் கழகம் தலைவர் த.லவன் தலைமையில் விபுலாநந்தா மைதானத்தில் இவ்வாரம் நடாத்திய கேபிஸ் ஹொக்கி முக்கோணச் சுற்றுப்போட்டி பரிசளிப்பு நிகழ்வில் ஜனாதிபதி விருதுச்சான்றிதழ் பெற்ற சிரேஸ்ட ஊடகவியலாளர் வி.ரி. சகாதேவராஜா பிரதமவிருந்தினர் அ.மகேந்திரராஜா உள்ளிட்ட அதிதிகளால் பொன்னாடை போர்த்தப்பட்டு கௌரவிக்கப்படுவதைக் காணலாம்.

## அம்பாறை மாவட்டத்தில் ஜனாதிபதிதேர்தலின்போது 523 வாக்களிப்பு நிலையங்கள் (காரைதீவு நிருபர் சகா)




எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்காக அம்பாறை மாவட்டத்தில் 523 வாக்களிப்பு நிலையங்களும் 53 வாக்கெண்ணும் நிலையங்களும் ஏற்படுத்தப்படுமென அம்பாறை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் திலின விக்ரமரத்ன அறிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை, பொத்துவில், சம்மாந்துறை, அம்பாறை ஆகிய 4 தொகுதிகள் உள்ளன.
கல்முனைத் தொகுதியில் 74 வாக்களிப்பு நிலையங்களும் பொத்துவில் தொகுதியில் 177வாக்களிப்பு நிலையங்களும் சம்மாந்துறை தொகுதியில் 93வாக்களிப்பு நிலையங்களும் அம்பாறை தொகுதியில் 179 நிலையங்களும் ஏற்படுத்தப்படவுள்ளன.

மாவட்டத்தில் அளிக்கப்படும் வாக்குகளை எண்ண 38 நிலையங்களும் தபால் வாக்குகளை எண்ண 15 நிலையங்களும் ஏற்படுத்தப்படவுள்ளன. இவையனைத்தும் அம்பாறை ஹார்டி தொழினுட்பக்கல்லூரி கட்டடத்தொகுதியில் அமைக்கப் படவுள்ளன.

வாக்குப்பெட்டிகளை கையளித்தல், கையேற்றல் மற்றும் எண்ணும் பணிகள் யாவும் ஹார்டி தொழினுட்பக் கல்லூரியிலேயே நடக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 'வளி மாசடைவதினால், நுரையீரல் தொற்றா நோய்களும் ஏற்படுகின்றன'

கொழும்பில் அண்மையில் ஏற்பட்டபட வளி மாசடைந்த நிலை முற்றாக நீக்கியுள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

வங்களா விரிகுடாவில் வீசிய காற்றினால் இந்தியாவில் நிலவிய சீரற்ற காற்று நிலை, இலங்கைக்கும் பரவியுள்ளதாகவும் இதுபற்றி எச்சரிக்கையுடன் செயற்படுதாகவும் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதேவேளை, சுகாதார ஊக்குவிப்பு பணியகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் சமூக வைத்திய நிபுணர் மருத்துவர் இனோக்கா சுரவீர உரையாற்றுகையில், வளி மாசடைவதினால் பல்வேறு சுகாதார நெருக்கடிகள் தலைதூக்கியிருப்பதாகவும், நுரையீரல் நோய் மாத்திரமன்றி ஏனைய தொற்றா நோய்களும் ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

வளி மாசடைவதால் நீண்டகால மற்றும் குறுங்கால சுகாதார நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. உலக சனத்தொகையில் 12 தசம் ஆறு மில்லியன் பேர் வளி மாசடைதல் தொடர்பான நெருக்கடியினால் உயிரிழக்கின்றனர். இதில் 38 இலட்சம் பேர் ஆசிய நாட்டவர்களாகும். எதிர்காலம் பற்றி கவனம் செலுத்தி வளி மாசடைவதை கட்டுப்படுத்துவது காலத்தின் தேவையாகும். மனித செயற்பாடுகள் வளி மாசடைவதற்கான பிரதான காரணமாகும் என்றும் அவர் கூறினார்.

## பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி



காலி - கராஹபிட்டிய பொலிஸ் பணியகத்தினால் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஒருவர் தப்பிச் செல்ல முற்பட்ட போது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் உயிரிழந்துள்ளார்.

34 கிராம் ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் இன்றைய தினம் கராஹப்பிட்டிய வைத்தியசாலைக்கு நீதிமன்ற வைத்திய பரிசோதனைக்காக அழைத்துச் செல்லப்பட்ட போது இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலைக்கு அருகில் கை விலங்குடன் இருந்த சந்தேகநபர் தப்பிச் செல்ல முற்பட்ட போது பொலிஸ் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அவர் உயிரிழந்துள்ளார்.

## வின்சன்ட் மகளிர் கல்லூரியின் மரநடுகைத் திட்டம்





மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் உயர்தர பாடசாலையின் 200ஆவது ஆண்டை முன்னிட்டு "vincent green hope -200" திட்டத்தின் ஒருபகுதியாக நேற்று (12.11.2019) கல்லடிக் கடற்கரையில் இரண்டரைஏக்கர் காணியில் மரங்களை நட்டு காடு உருவாக்கல் திட்ட முயற்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது.





இத்திட்டமானது 1997 உயர்கல்விகற்ற மாணவிகளால் முன்னெடுக்கப்பட்டு, பழைய மாணவ சங்கத்தினருடன் இணைந்து அதிபர் திருமதி.கரண்யா சுபாகரன், பிரதி அதிபர் திருமதி. சாரதா பிரேமிராஜ் ரவிச்சந்திரா மற்றும் முன்னாள் அதிபர் திருமதி. சுபா சக்கரவர்த்தி, பழைய மாணவர் சங்கச் செயலாளர் திருமதி. காயத்ரி நகுலன் ஆகியோர் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

இதில் ஆசிரியர்களும் மாணவர்களும் பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இதற்கு கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவளங்கள் பேணல் திணைக்களத்துடன் மண்முனை வடக்கு பிரதேச செயலகமும் தமது ஒத்துழைப்பை வழங்கியிருந்தது.

இந்நிகழ்வின் இறுதியில் அனைத்து மாணவர்களும் இத்திட்டத்திற்கு தமது முழு ஒத்துழைப்பையும் வழங்குவதாக உறுதி மொழி அளித்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

## சகல வைத்திய ச ாலைகளுக்கும் அடுத்தாண்டு இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள்



நாட்டிலுள்ள சகல வைத்திய சாலைகளுக்கும் அடுத்தாண்டு இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் வழங்கப்படும் என்று சுகாதார போஷாக்கு மற்றும் சுதேசிய வைத்தியத்துறை அமைச்சர் டொக்டர் ராஜித சேனரட்ன தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் இடம்பெற்ற நிகழ்வில் அமைச்சர் உரையாற்றினார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதி வரை பத்தாயிரத்து 500 இற்கும் அதிகமான ஸ்டென்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன்மூலம் பைபாஸ் எனப்படும் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டவர்களுக்கு பாரிய நன்மை கிடைத்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.



# ஆதலால் அனைவரும் வாக்களியுங்கள்...

இது ஒன்றும் புது விடயமல்ல.

ஒவ்வொரு தேர்தலின் போதும் ஒரு சிலராவது பொதுமக்களுக்கு கூறும் அறிவுரைதான் இது. ஆனால் இதனைத் திரும்பத்திரும்ப கூறவேண்டிய அவசியம் இருக்கத்தான் செய்கிறது.

எல்லோரும் வாக்களியுங்கள் என்று கோருவதுதான் அது. ஆம், எல்லோரும் வாக்களியுங்கள்!

வாக்கு - இது உங்கள் உரிமை. அதேவேளை தேர்தலில் வாக்களிப்பது என்பது உங்கள் முக்கியமான ஜனநாயகக் கடமை. அதனைத் தவற விடாதீர்கள். சிலவேளை, கடந்தகால அரசியல் நடப்புக்கள் உங்களுக்கு ஏற்படுத்திய விரக்தி, உங்களை வாக்களிப்பதில் இருந்து விலகியிருக்க வேண்டும் என்று உணரச் செய்யலாம். ஆனால், வாக்களியுங்கள். எந்தவிதக் காரணம் கொண்டும் வாக்களிப்பில் இருந்து விலகியிராதீர்கள்.

உலகளவில் இருக்கின்ற தேர்தல் முறைமைகளில் பலவிதமான குறைபாடுகள் இருக்கலாம். சில தேர்தல் முறைமைகள் மிகவும் அடிப்படையானவையாக இருக்கலாம். அவற்றால் அனைத்து மக்களின் எதிர்பார்ப்பையும் தீர்க்க முடியாமல் இருக்கலாம். அதேபோல, இலங்கையில் அமலில் இருக்கும் இந்த விகிதாசாரத் தேர்தல் முறை குறித்தும் பல விமர்சனங்கள் அண்மைக்காலமாக பலதரப்பாலும் முன்வைக்கப்படுகின்றன.

இந்தத் தேர்தல் முறையால் அரசியல் கட்சிகளின் உட்கட்சி ஜனநாயகம் பாதிக்கப்படுகின்றது என்று சிலர் குறைகூறுகின்றனர். ஒரு தேர்தல் மாவட்டத்தில் இருக்கக்கூடிய சில தொகுதிகளுக்கு இந்தத்தேர்தல்



முறையால் உறுப்புரிமை சிலவேளைகளில் இல்லாமல் போய்விடுகின்றது என்ற குற்றச்சாட்டும் இருக்கின்றது.

நாட்டின் தலைவிதியை மிகவும் சிறுபான்மை வாக்குகள் நிர்ணயித்துவிடுகின்றன என்ற குற்றச்சாட்டு பெரும்பான்மை மக்களால் முன்வைக்கப்படுகின்றது.

எத்தனை குறைகள் கூறப்பட்டாலும், உலகளவில் பயன்பாட்டில் இருக்கும் தேர்தல் முறைமைகளில் மிகவும் நவீனமானது இது. நுட்பமானது இது. முடிந்த அளவு அனைத்து மக்களின் வாக்குகளுக்கும் ஓரளவு அர்த்தத்தை

**சீவகன் பூபாலரட்ணம்**

கொடுப்பது இந்த விகிதாசாரத் தேர்தல் முறைதான்.

இந்தத் தேர்தல் முறைக்கு எதிராகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் கூட பல சமயங்களில் அதியுச்ச ஜனநாயகத்தை பிரதிபலிப்பதாக அமைந்துவிடுகின்றன.

கட்சிகளின் உள்ளே இல்லாத ஒற்றுமையை, ஜனநாயகத்தை இந்த தேர்தல் முறைமை குலைப்பதாகக் கூறுவது எடுபடக் கூடிய நியாயம் அல்ல.

ஒரு சிறுபான்மை வாக்காளர்களின் வாக்குகள் தேர்தல் முடிவுகளை தீர்மானிப்பதாக கூறப்படும் குற்றச்சாட்டு மறுபுறம், சிறுபான்மை மக்களின் வாக்குகளுக்கும் நல்ல பெறுமதி இருக்கின்றது என்பதை காண்பிக்கிறது. பெரும்பான்மையின மக்கள் சிறுபான்மை மீது திணிக்கக்கூடிய ஏகாதிபத்தியத்தை தவிர்க்க, தடுக்க அது உதவுகின்றது(சரியாக பயன்படுத்தப்பட்டால்). இது போன்று பல காரணங்கள் இந்தத் தேர்தல் முறைக்கு ஆதரவாக இருக்கின்றன.

ஆகவே இந்தத் தேர்தல் முறை ஒப்பீட்டளவில் சிறப்பானதுதான். ஆகவே அது உங்களுக்கு தரக்கூடிய கூடுதல் உரிமையை, அதிகாரத்தை பயன்படுத்த அனைவரும் வாக்களியுங்கள்.

ஒப்பீட்டளவில் இந்தத் தேர்தல் முறைமை சிக்கலானதுதான். இதில் வாக்களிப்பதும் சற்று சிரமமானதுதான். உங்களுக்கு பிடித்த கட்சியை நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டும், அதில் உங்களுக்கு பிடித்த வேட்பாளர்களை இலக்கங்கள் மூலம் தேர்ந்தெடுக்க வேண்டும்.

நடக்கவுள்ள ஜனாதிபதி தேர்தலைப் பொறுத்தவரையில் நீங்கள் மூன்று வேட்பாளர்களை முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது தெரிவுகளின் மூலம் தேர்ந்தெடுக்க வேண்டும். இல்லாவிட்டால் ஒருவருக்கு மாத்திரம் புள்ளடி இடுவதன் மூலம் ஒருவரை மாத்திரம் தேர்ந்தெடுக்க முடியும்.

ஆனால், இந்தத் தேர்தலில் வாக்கு எண்ணப்படும் முறையில் காணப்படும் நுட்பமான முறைமை 50 வீதம் வாக்குகளை எவரும் எடுக்காத பட்சத்தில் இரண்டாம் கட்ட வாக்கு எண்ணிக்கைக்கு வழி செய்யலாம். ஆகவே, இந்த தேர்தலில் வெறுமனே ஒரு வேட்பாளருக்கு மாத்திரம் வாக்களிக்காமல் உங்கள் அடுத்த தெரிவு குறித்தும் உங்கள் வாக்குகளை அளிக்க நீங்கள் எதிர்பார்க்கப்படுகின்றீர்கள். இது உங்களுக்கான ஒரு வாய்ப்பு. ஆகவே, முடிந்தவரை உங்கள் அடுத்த தெரிவுகளுக்கும் இடம் கொடுங்கள். அது உங்கள் வாக்குகளை மேலும் பெறுமதியாக்குவதுடன் அனைத்து மக்களின் உணர்வுகளும் இந்தத் தேர்தலில் பிரதிபலிக்கப்பட உதவும். அது ஜனநாயகத்தின் உச்ச நிலை. ஆகவே, அனைவரும் முழுமையாக வாக்களியுங்கள்.

உரிய நேரத்தில் வக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று, அமைதியாக உங்கள் வாக்குகளை அளியுங்கள். யாருக்கு வாக்களிப்பது என்ற முடிவை, உணர்ச்சிவசப்படாது, யதார்த்தமாக, தர்க்க ரீதியாக யோசித்து உங்கள் வாக்குகள மிகக் கவனமாக பதிவு செய்யுங்கள்.

உங்கள் நாட்டின், பிரதேசத்தின், வீட்டின் நலனை மனதில் வைத்து உங்கள் வேட்பாளர் யார் என்பதை தெரிவு செய்யுங்கள். அதுவே ஒரு சிறந்த நாட்டின் பிரஜைக்கு அழகு.

இங்கு என்ன ஜனநாயகம் இருக்கிறது, இந்த நிலையில் வாக்களித்தால் என்ன நடந்துவிடப்போகிறது என்ற சிந்தனை வேண்டாம். இருக்கக்கூடிய ஜனநாயகத்தை முடிந்தவரை உங்கள் வாக்குகளால் அனுபவிக்க முயற்சியுங்கள். இல்லாத ஒன்றைத் தேடுவதைவிட இருக்ககூடியதை முடிந்தவரை பயன்படுத்துவது, அனுபவிப்பது நல்ல பலனைத்தரும்.

இருக்கும் ஜனநாயகத்தை பேணுவதும், அதனை மேம்படுத்துவதும், அனுபவிப்பதும் உங்கள் கைகளில் உள்ள வாக்குகளிலேயே தங்கியிருக்கின்றன.

ஆதலால் அனைவரும் வாக்களியுங்கள்.

# அறிவாலயம் அறக்கட்டளை நம்பிக்கை நிதியத்தின் ஆக்கபூர்வமான செயற்பாடுகள்




பட்டிப்பளை பிரதேச செயலகத்தின் பண்டாரியாவெளி கிராமசேவையாளர் பிரிவினை பிறப்பிடமாக கொண்டு வசித்து வந்தவரும், விவசாயத்தை பிரதான தொழிலாக கொண்டவருமான ஞானமுத்து அலையப்போடி அவர்களின் கனவிற்கு அமைவாகவும் அவர் இறந்து ஒருவருட நினைவு தினத்தை முன்னிட்டு, அனைத்தும் இழந்து நிற்கும் எமது சமுதாயத்தை கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும் என்ற சிந்தனையுடன் அவரது மகன் பண்டாரியாவெளி கிராமத்தை பிறப்பிடமாகவும் பிரான்ஸ் நாட்டை வசிப்பிடமாகவும் கொண்டிருக்கின்ற அலையபோடி நல்லரெட்ணம் அவர்கள்




தனது சொந்த முயற்சியில் நிதியினை சேகரித்து இக் கிராமத்தில் 'அறிவாலயம் அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்'; என்ற அமைப்பை 2010 காலப்பகுதில் ஆரம்பித்து இப்பிரதேசத்தில் உள்ள மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் வகையில் முதற்கட்டமாக புலமைப்பரிசில்கள் எழுதும் மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புக்களுக்கான ஆசிரியர்களை நியமித்து அவர்களுக்கான கொடுப்பனவை வழங்கி இரவு பகல் பாராமல் நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்து நடத்தி வந்தார்.

அதன் விளைவாக வருடாவருடம் பட்டிபளைப் பிரதேசத்தில் சித்தியடைந்த ஒவ்வொரு மாணவர்களுக்கும் ருபா 5000 படி வங்கியில் வைப்பில் இட்டு பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டு வருகின்றனர். மற்றும் இக் கிராமத்தில் யுத்ததால், வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழும் தாய் தந்தை இழந்த பிள்ளைகளுக்கான 'சக்தி இல்லம்'; 2012 அமைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது இதற்கான மாதாந்த உணவு செலவினை பொறுப்பெடுத்து நடத்தி வருகின்றார்.

அடுத்துபின் தங்கிய கிராம பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியராக பணிபுரிகின்றவர்களுக்கு மாதாந்த ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை வழங்கிவருகின்றார். அத்துடன் பணடாரியாவெளி கிராமமக்கள் பத்திரிகைகள் அறிவுசார்ந்த புத்தகங்கள் வாசிப்பதற்கான வசதி வாய்ப்பினை ஏற்படுத்தும் முகமாக அக்கிராமத்தில் அறிவாலயம் நுலகம் என்ற அலுவலகத்தை நியமித்து அதனை பராமரித்துவரும் பணியாளருக்கு மாதாந்த ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கி வருகின்றார் என்பது குறிப்பிடதக்க விடயமாகும். இதன் அடிப்படையில் 05 11 2019 அன்று பிறக்கும் சிசுவின் வாழ்வை உயர்த்துவோம் என்ற தொனிபொருளில் பண்டாரியாவெளி கிராமத்தில் பிறக்கின்ற ஒவ்வொரு குழந்தைக்கும் வங்கி கணக்கு ஆரம்பித்து ரூபாய் 5000படி வைப்பிலிட்டு பரிசுபொருட்களும் வழங்கப்பட்டது.

# பெருங்கதையாடல்களால் ஏமாற்றப் படும் கிழக்கு மக்கள் - இம்முறை சனாதிபதித் தேர்தலிலும் ஏமாறுவார்களா?

சுதந்திரத்துக்குப் பிற்பட்ட இலங்கை அரசியலில் கிழக்குத் தமிழர்களின் அரசியல் கருத்தியல் தளமாக யாழ் மேலாதிக்கவாதம் கட்டமைத்த குறுந் தமிழ்த் தேசியவாதமே இருந்து வருகின்றது. இந்தக் குறுந் தேசிய வாதிகளின் கைம்பொம்மைகளாவே கிழக்குத் தமிழர்கள் செயற்பட்டு வந்திருக்கிறார்கள். அது சிங்கள சிறி எதிர்ப்புப் போராட்டமாக இருக்கலாம் அல்லது கல்வியில் தரப்படுத்தலுக்கெதிரான போராட்டமாக இருக்கலாம். எந்தப் போராட்டமாக இருந்தாலும் அந்தப் போராட்டத்தில் தமக்கு இருக்கும் நலனை அடிப்படையாகக் கொண்டு அந்த வர்க்கம் வடிவமைத்து தந்த போராட்டங்களை கொண்டு நடாத்துவபர்களாகவே நாம் செயற்பட்டு வந்திருக்கின்றோம். இதனைக் கொண்டு நடாத்துவதற்கு மறுப்புத் தெரிவித்து மாற்றுக் கருத்துக்களை முன்வைத்தவர்கள் அனைவரும் தமிழ் இனத் துரோகிகளாக முத்திரை குத்தப்பட்டனர். குத்தப்பட்ட முத்திரைகளை சமூக ஏற்புடமையாக்குவதற்கு அவர்களால் உருவாக்கப்படும் கதையாடல்கள் உதவின. இக்கதையாடல்களை பெருங்கதையாடல்கள் என அழைக்கலாம்.




தேர்தல்களில் கிழக்கு மக்கள் யாரை ஆதரிக்க வேண்டும் என்பதையும் தங்கள் அரசியல் தலைவிதி என்ன என்பதையும் தீர்மானிப்பவாகளாக இந்த யாழ் மேலாதிக்க வர்க்கமே இருந்து வருகின்றது. அதற்கு அவர்களுக்கு உதவுவதும் இந்த பெருங்கதையாடல்களேயாகும்.

தற்போதைய சனாதிபதித் தேர்தல் தொடர்பாக கிழக்குத் தமிழர்களின் அரசியல் தீர்மானத்தில் தாக்கத்தைச் செலுத்துபவையாகவும் இந்த பெருங்கதையாடலே முக்கிய பங்காற்றுவதை அவதானிக்க முடிகின்றது. இதற்கு கீழ்வரும் கதையாடலைக் குறிப்பிடலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக் கட்சியான தமிழ் அரசுக் கட்சி சனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சஜித் பிரேமதாசாவை ஆதரிக்க வேண்டும் என்ற அக்கட்சியின் முடிவு தொடர்பாக ஒரு முக்கியமான கல்விப் புலம் சார்ந்தவருடன் உரையாட சந்தர்ப்பம் கிடைத்தது. அவர் தனது உரையாடலில் தமிழ் மக்கள் எவ்வாறு அந்தக் கொலைகாரனை மறப்பார்கள் ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்களையும் வெள்ளைக் கொடிபிடித்து சரணாகதி அடைந்தவர்களையும் எதுவும் செய்யாத சின்னஞ்சிறு சிறுவன் பாலச்சந்திரனையும் கொன்று குவித்தவனுக்கு என்னென்று வாக்களிக்க முடியும். மனச்சாட்சியுள்ள எந்தத் தமிழனாவது கோட்டபாயாவுக்கு வாக்களிக்க மனம் வருமோ? அதனால்தான் கூட்டமைப்பினர் சஜித்துக்கு வாக்களிக்கும்படி தமிழ் மக்களைக் கேட்டுள்ளனர் என தனது நியாயத்தை முன்வைத்தார். இவ்வாறான கதையாடல்கள் இலகுவாக மக்களின் மனங்களைப் பற்றிப் பிடிப்பதோடு இதனை எதிர்த்து கேள்வி கேட்பதே ஒரு துரோகச் செயல் என்கின்ற படிமத்தையும் எம்மிடம் உருவாக்கிவிடும். இதனால் கோத்தபாய ராஜபக்சவுக்கு ஆதரவு தெரிவிப்பதும் வாக்களிப்பதும் தமிழ் இனத் துரோகமாக கொள்ளப்படுகின்றது. இதுதான் இந்தப் பெருங்கதையாடல்களின் பலமாகும்.

இந்தப் பெருங் கதையாடல்கள் மறைக்கும் உண்மைகளை மனச்சாட்சி உள்ள மனிதர்கள் வெளிக்கொண்டு வருவதற்கோ அல்லது அவை பற்றிப் பேசுவதற்கோ தயங்குதல் கூடாது. அதனால், ஆறுதலாக அவருடைய நியாயத்தை செவிமடுத்த நான், அவரிடம் இவ்வாறு கேட்டேன் 'நீங்கள் சொல்வது சரிதான் ஆனால் இதைச் சொல்கின்ற நாங்களும் பரிசுத்தமானவர்களாக இருக்க வேண்டும் அல்லவா? புலிகள் மாற்று இயக்கங்களைத் தடைசெய்த போது அந்த இயக்கங்களை விட்டு ஒதுங்கி சாதாரண வாழ்வு வாழ்வதற்காக வீடுகளுக்கு வந்தவர்கள் எந்த அடிப்படையில் சுட்டுக்கொல்லப்பட்டார்கள்? கந்தன்கருணைப் படுகொலை என்று கூறப்படும் மட்டக்களப்பைச் சேர்ந்த ரெலோ போராளிகள் எவ்வாறு கொல்லப்பட்டார்கள்? இந்திய இராணுவம் இருந்தபோது எதுவும் அறியா அப்பாவித் தமிழ் இளைஞர்கள் கட்டாய இராணுவப் பயிற்சிக்காக வீடு வீடாகச் பிடித்து இழுத்துச் சென்று இராணுவப் பயிற்சி வழங்கப்பட்டனர், இந்திய இராணுவம் வெளியேறிய மறுகணமே இவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் கணிசமானவர்கள் புலிகளிடம் சரணாகதி அடைந்தபோதும் அவர்கள் அனைவரையும் சுட்டுக்கொல்லப்பட்டது எந்தவகையில் நியாயம் ஆகும்? 1990 ம் ஆண்டு மட்டக்களப்பில் பொலிஸ்நிலையங்கள் புலிகளால் சுற்றிவளைக்கப்பட்ட போது சரணாகதி அடைந்த அத்தனை பொலிஸ் உத்தியோகத்தர்களும் சுட்டுக்கொல்லப்படவில்லையா? கருணா இயக்கத்திலிருந்து வெளியேறியபோது அவருடன் வெளியேறி பின்பு புலிகளின் அழைப்பை ஏற்று மன்னிப்பு வழங்கப்படும் என நம்பி வன்னிக்குச் சென்று சரண் அடைந்த தமது சொந்தப் போராளிகள் எவ்வாறு கொல்லப்பட்டார்கள். அது போல் எத்தனை தமிழ் சமூகசேவையாளர்களையும் கல்விமான்களையும், கலைஞர்களையும் பொது மக்களையும் குறிப்பிட்ட இடங்களுக்கு வரும்படி அழைத்து சுட்டுக்கொன்றிருக்கிறார்கள். அவை எல்லாவற்றையும் மறந்து அவற்றை நியாயம் என்று ஏற்றுக் கொண்டு புலிகளுக்கு ஆதரவு தெரிவித்து அவர்களை வளர்த்தவர்கள்தான் நாம். அது நியாயம் என்றால் கோத்தபாய ராஜபக்ச அவர்களை இவ்வாறு குற்றம் சுமத்தி ஒதுக்குவதற்கான தார்மீக உரிமை எங்களுக்கு இல்லை என்றேன்.

அது போல் இன்று கோதபாயாவை கொலைகாரன் என்று கூறுபவாகள்தான் அன்று முள்ளிவாய்க்காலில் படுகொலைகள் நடந்து கொண்டிருந்த போது பாராளுமன்றத்தை அலங்கரித்துக் கொண்டு யுத்தத்தை நிறுத்தி பொதுமக்களை காப்பதற்குரிய எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்காது புலிகள் அழிக்கப்பட்டால் தாமே தமிழ் மக்களின்

**எழுவான் வேலன்**

ஏகப் பிரதிநிதிகள் என்ற எதிர்கால எதிர்பார்ப்புடனும் ஆசையுடனும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்கள். முள்ளிவாய்க்கால் படுகொலைக்கும் புலிகளின் அழிவுக்கும் தனியே மகிந்த அரசையும் கோதபாயாவையும் விரல் சுட்ட முடியாது கூடவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும்தான் காரணம் என்பதை மிக நாசூக்காக மறைத்து விடுகின்றோம். அந்த நேரத்தில் மக்கள் பிரதிநிதிகள் என்றவகையில் அவர்கள் எவ்வகையான நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும் என்பது பற்றியேனும் நாம் சிந்திக்க முடியாதளவிற்கு பெருங்கதையாடல்களுக்குள் மூழ்கடிக்கப்பட்டிருக்கின்றோம்.

மகாபாரதத்தில் கர்ணனின் இறப்பு தனியே அர்ச்சுனனினால் மட்டும் நிகழ்ந்தவையல்ல அவனுடைய தாய் குந்திதேவியினாலும்தான் நிகழ்ந்தது என்பதை மகாபாரதம் அறிந்த அனைவரும் அறிவோம். அது போன்றே புலிகளின் அழிவு அல்லது அழிக்கப்பட்டமை தனியே கோதபாயாவினாலோ அல்லது மகிந்த அரசினாலோ நிகழ்தவையல்ல அது கூட்டமைப்பினராலும் நிகழ்ந்தவைதான். அந்தக் கூட்டமைப்பினரை புனிதமானவர்களாகவும் தமிழ்த் தேசியப் பற்றாளர்களாகவும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டு அவர்களை அரசியல் அரங்கில் அங்கீகரித்து அவர்களே தமிழ் மக்களின் அரசியல் தலைவிதியை தீர்மானிக்கின்ற சக்திகளாகவும் வைத்துக்கொண்டிருப்பது தமிழ் மக்களின் அரசியல் வங்குரோத்துத்தனமாவதுடன் இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்ட மக்களுக்குச் செய்கின்ற துரோகமும் ஆகும் என்பதை தமிழ் மக்கள் உணர்தல் வேண்டும்.

யாழ் மேலாதிக்கவாத அரசியல் கருத்துநிலைக்கும் இந்தப் பெருங்கதையாடல்களுக்கும் யாழ் பல்கலைக்கழகமும் கணிசமான பங்கினை ஆற்றிவருகின்றது. அவர்களுடைய இறுதிப் பங்களிப்புத்தான் 13 அம்சக் கோரிக்கைகளாகும். ஆனால் கிழக்கில் இருக்கின்ற கிழக்குப் பல்கலைக் கழக கல்விசார் சமூகம், இந்த யாழ் மேலாதிக்க கருத்து நிலைக்கோ அல்லது அவர்களின் பெருங்கதையாடல்களுக்கு எதிராகவோ அல்லது கிழக்கின் அரசியல் சூழ்நிலைக்கு ஏற்றவண்ணமோ எந்தவொரு அரசியல் தத்துவார்த்த கருத்தியல் தளத்தினையும் உருவாக்கிக் கொள்ளாமல் யாழ் பல்கலைக்கழகத்தின் பொம்மைகளாகவும் யாழ் மேலாதிக்கவாதிகளின் எடுபிடிகளாகவுமே செயற்பட்டு வருகின்றனர்.

இது கிழக்கின் அரசியல் பின்னடைவுக்கு மற்றுமொரு காரணமாகும். கிட்டத்தட்ட 40 வருடங்களாக கிழக்கிற்கு அரசியல் தலைமைத்துவத்தினை வழங்க முடியாத பல்கலைக் கழகமாகவே கிழக்குப் பல்கலைக் கழகம் இருந்து வருவது மிகப்பெரிய துரதிஸ்டவசமானதாகும்.

எனவே கிழக்கு மக்கள் தங்களுக்கான ஓர் அரசியல் தத்துவார்த்த தளமும் இல்லாமல் தமிழ் குறுந்தேசிய வாதிகளினால் தாங்கள் ஏமாற்றப்படுகின்றோம் என்பதே தெரியாமல் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இம்முறை சனாதிபதித் தேர்தலிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெருங்கதையாடல்களை நம்பி தமிழ் மக்கள் ஏமாறுவார்களாக இருந்தால் தந்தை செல்வா கூறியது போல் 'இனி கடவுள்தான் தமிழ் மக்களைக் காப்பாற்ற வேண்டும்' என்று கூறுவதைத் தவிர வேறுவழி தெரியவில்லை.

# ஜனாதிபதி தேர்தலையொட்டி கல்லடியில் மையம்கொள்ளும் மாற்றம்



ஜனாதிபதி தேர்தலுக்கு எண்ணிச் சில நாட்களே உள்ளன. தேர்தல் வாக்களிப்பு என்பது குறித்த ஐந்து வருடங்களுக்கு மீளப்பெற முடியாத ஆணையாகும். எனவே நின்று நிதானமாக பயன்படுத்தப்பட வேண்டிய ஒரு உரிமையே வாக்குரிமையாகும். அந்த வகையில் எமது மக்களின் தெரிவானது ஒரு சரியான தலைமையை நோக்கி எடுக்கப்படவேண்டும்.

இத்தகைய தீர்மானங்களை நோக்கி பலவிதமான பிரச்சாரங்களையும் ஒருங்கிணைக்கும் மையமாக கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு கல்லடி மாறிவருவது ஒரு சுவாரசியமானதொன்றாகும்.

கிழக்கு மாகாணத்தின் இறுதி நேர அரசியல் மாற்றங்களையும் முடிவுகளையும் தீர்மானிப்பதில் இந்த தேர்தலில் கல்லடியில் இடம் பெற்றுவரும் கூட்டங்கள் பெரும் பங்கு வகிக்கப்போகின்றன. அதேவேளை முன்னாள் முதல்வர் சந்திரகாந்தனின் இறுதிநேர ஆதரவைக்கோரி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தூதுவர் பேரம் பேரம் பேசல்களில் ஈடுபடுமளவுக்கு நிலைமைகள் சூடு பிடிக்கின்றன.

இந்தக் கல்லடியானது பல விடயங்களில் மட்டக்களப்பு தமிழகத்தாரின் வாழ்வியலோடு இரண்டறக்கலந்த இடமாகும். எமது அடையாளங்களான பாடும் மீன், கல்லடி பாலம், இராமகிருஷ்ண மிஷன், சாண்டோ சங்கரதாஸ், மாமேதை விபுலானந்தரின் கல்லறை என்று சொல்லிக்கொண்டே போகலாம்.

அரசியல் ரீதியாகவும் இந்த கல்லடிக்கு ஒரு வரலாறும் உண்டு. கிழக்கு போராளிகள் ஆயுதங்களை கைவிட்டு ஒரு அரசியல் கட்சியாக பரிணமித்தவேளையில் உருவாகிய தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியானதும் தனது முதலாவது தேசிய மாநாட்டை இந்த கல்லடியில்தான் நடாத்தியிருந்தது. அந்த மாநாட்டு தீர்மானம் 'கல்லடி தீர்மானம்' என்றே அழைக்கப்படுகின்றது. ஆனால் அது வரலாறுகளில் பெரிதாக சிலாகிக்கப்படுவதில்லை. தமிழ் ஊடகங்களில் காணப்படுகின்ற யாழ் - மேட்டுக்குடி ஆதிக்கங்களே அதற்கு காரணமாகும்.

இந்நிலையில் ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக வடக்கில் அறிவிக்கப்பட்ட மூன்று கட்சிகளின் கூட்டமைப்பானது (தமது 13 அம்ச கோரிக்கைகளை எந்தவொரு வேட்பாளரும் ஏற்றுக்கொள்ளாத நிலையிலும்) சஜித் பிரேமதாசாவுக்கு தமது நிபந்தனையற்ற ஆதரவை வழங்கியுள்ளன.

அதேவேளை கிழக்கிலோ வரலாற்றில் ஒரு போதும் இல்லாத வகையில் முதற்தடவையாக அரசியல் தலைமைகள் 13 கட்சிகளை ஒருங்கிணைத்து, இந்த ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக ஒரு கிழக்கு கூட்டணியை உருவாக்கியுள்ளனர். கல்லடியில் இடம்பெற்ற இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட கோத்தபாய ராஜபக்ஸவுக்கு முழு ஆதரவு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தமிழரசுக் கட்சி தலைமையிலான தமிழ் தேசிய கூட்டமைப்பினர் நான்கு வருடங்களிலும் பேசிப்பேசி அலுத்துப்போன பழங்கதைகளையே மீள ஒப்புவித்து வருகின்றனர். அதாவது புதிய யாப்பினை கொண்டுவருதல், அதிகார பகிர்வு என்கின்ற விடயங்களையே அவர்களால் பேச முடிகின்றது.

உலக முரண்பாடுகளின் அடிப்படையே பொருளாதாரந்தான் என்பார் கம்யூனிச தத்துவத்தின் மூலவரான கார்ல் மாக்ஸ் என்னும் அறிஞர். அந்த வகையில் இருவேறு துருவங்களாக இன்று வடக்கும் கிழக்கும் செயற்படுவதற்கும் அடிப்படை பொருளாதார வேறுபாடே காரணம் எனலாம். வடக்கின் பொருளாதாரம் என்பது 'வெஸ்டர்ன் யூனியனை' நம்பியுள்ளது. எமது பொருளாதாரமோ 'விளையுமா வயல்' என்கின்ற நம்பிக்கையில் உள்ளது. எனவேதான் கிழக்கு தலைமைகள் தமது மண்ணுக்கும் மக்களுக்கும் அவசிய தேவையாகவுள்ள கீழ்வரும் விடயங்களை முன்னிறுத்தி கோத்தபாயாவுக்கான ஆதரவு தெரிவிக்கின்றனர் என நாம் நோக்கமுடியும். *கிழக்கில் விசாரணையோ பிணையோ இன்றி நான்கு வருடமாக அரசியல் பழிவாங்கல் காரணாமாக சிறைப்படுத்தப்பட்டுள்ள கிழக்கு மாகாண முன்னாள் முதல்வரை விடுதலை செய்தல்,

*காலதாமதமின்றி கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமுயர்த்தல்,

* நான்கு வருடமாக கைவிடப்பட்டு கிடக்கும் மட்டக்களப்பு நகர நூலக கட்டத்தை பூர்த்தி செய்தல்,

*மேலும் பல வீதிகள், பாலங்கள், புதிய கல்வி வலையங்கள், புதிய பிரதேசசெயலகங்கள், தொழிற்பேட்டைகள், வேலைவாய்ப்புக்கள், உரமானியங்கள், குளங்கள் அவிருத்தி, பெண்கள், முன்னாள் போராளிகள் போன்றோருக்கான மேம்பாட்டு திட்டங்கள் போன்றவை குறித்து பல விதமான வாக்குறுதிகள் கோத்தபாய தரப்பினரால் வழங்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

கல்லடியில் இடம்பெற்ற கோத்தபாய ஆதரவு கூட்டத்தினை தொடர்ந்து அதற்கு போட்டியாக சஜித்துக்கான ஆதரவு கூட்டமும் கல்லடியிலே நடைபெற்றது. ஆனால் அங்கே தமிழ் தேசிய தலைவர்களோ எம்பிக்களோ மாகாண சபை உறுப்பினர்களோ பிரசன்னமாகவில்லை. காரணம் சஜித்தை ஆதரிக்கும் முஸ்லீம் தலைமைகளோடு தங்களை இனம் காட்டுவதில் அவர்களுக்குள்ள தயக்கமேயாகும். கிழக்கு மாகாண சபையில் மக்களின் ஜனநாயக ஆணைகளுக்கு விரோதமாக முஸ்லீம் காங்கிரசோடு நடத்திய கூட்டாட்சியில் இடம்பெற்ற இனவொதுக்கல்களும் அதன்காரணமாக கிழக்கு மக்களிடையே ஏற்பட்டிருக்கின்ற மனக்குறைகளும் இந்த தயக்கத்து அடிப்படையானவையாகும்.

## அறுமுகுட்டிபோடி

அதே போன்று தமிழ் தேசிய கூட்டமைப்பினர் வடக்கில் எடுத்த முடிவுகளை கிழக்கில் முன்வைத்து வாக்கு கேட்க முடியாத இக்கட்டான சூழ்நிலையில் மாட்டிக்கொண்டு முழிக்கின்றனர். போலித் தேசிய வாக்குறுதிகளை மீண்டும் மீண்டும் மக்கள் முன் வைக்க முடியாத நிலை உருவாகியுள்ளது. இதுபோன்ற காரணங்களால் சஜித் பிரேமதாசாவை முஸ்லீம் தலைவர்களோடு இணைந்து தமிழ் தேசிய கூட்டமைப்பினரால் கல்லடியில் சந்திக்க முடியவில்லை. இக்கூட்டம் முடிந்த பின்னர் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் தமது சார்பு வேட்பாளர் சஜித் பிரேமதாசாவை தனியாக சென்று ஹோட்டலில் சந்தித்துள்ளனர். அவர்களது வெளிப்படைத்தன்மையற்ற இந்நடவடிக்கைகள் ஒரு மாபியா கும்பலின் நடவடிக்கைகளை ஒத்தவை என்கின்ற விமர்சனங்களின் எழுந்துள்ளன.

ஆகவே இன்னுமொரு சஜித் ஆதரவு கூட்டத்தை முஸ்லீம் தலைமைகளை தவிர்த்து சம்பந்தர் தலைமையில் இதே கல்லடியில் கூட்டும் வாய்ப்புகளும் உண்டு. சிலவேளை இக்கட்டுரை வெளியாகும் வேளை அது சாத்தியமாகலாம். எனவே எதிர்வரும் தேர்தலில் இந்த கல்லடி படும்பாடு கிழக்கின் அரசியல் வரலாற்றில் ஒரு பாரிய மாற்றத்துக்கு வழிவகுக்கும் சாத்தியங்களை நோக்கி நகருகின்றன.

சுமார் ஏழு வருடங்களுக்கு முன்னர் நிறைவேற்றப்பட்ட கல்லடி தீர்மானத்தின் முதலாவது பிரகடனத்தை இந்த இடத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தமானது என்று கருதுகின்றேன். வடக்கு கிழக்கு பிரதேசங்களை அரசியல் நிருவாக ரீதியாக ஒரே கொள்கையின் கீழ் நிர்வகிக்க முயலுகின்ற கோஷங்கள் "கிழக்கு மக்களின் பல்லின சூழலுக்கும், சுயவிருப்பத்துக்கும், அரசியல் அபிலாஷை மற்றும் இறைமைக்கும் எதிரானது. (கல்லடி தீர்மானம் 12/032012) என்கின்றது அந்த பிரகடனம்.

இந்தப் பிரகடன வார்த்தைகளின் தாற்பரியங்கள் இன்று அதே கல்லடி மேடைகளில் அங்கீகரிக்கப்படுகின்றன என்பது ஒரு தவிர்க்க முடியாத வரலாற்று நியதி என்பதை தவிர வேறென்ன?

# சொல்லத் துணிந்தேன்! 26



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளரையும் ஆதரிக்காது நடுநிலை வகிப்பது எனத் தபால்மூல வாக்களிப்பத் தினத்தின் போது அறிவித்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இப்போது சஜித்பிரேமதாச அவர்களை ஆதரிப்பதாகப் பகிரங்கப்படுத்தியுள்ளது. அதற்கு அவர்கள் கண்டுபிடித்துக் கூறியுள்ள காரணம் சஜித் பிரேமதாசாவினால் வெளியிடப்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழர்களின் கோரிக்கைகளுக்குச் சாதகமான விடயங்கள் உள்ளன என்பதாகும்.



அச்சடிக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தை வைத்துத் தமிழர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்ற அளவுக்குத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அரசியல் 'வங்கு ரோத்துத்தனம்' ஆகியுள்ளது.

1977ம் ஆண்டுப் பொதுத்தேர்தலின் போது ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்களின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழர்கள் தனிநாடுகேட்டுப் போராடுவதற்கான காரணங்களை நியாயமானதாக ஏற்றுக் கொண்டு தனது ஆட்சியில் சர்வகட்சி மாநாட்டைக் கூட்டி இனப்பிரச்சினைக்கான அரசியல்தீர்வை வழங்கப் போவதாக அறிவித்திருந்தார். அதே ஜே. ஆர். ஜெயவர்த்தனாதான் தேர்தல் முடிவுற்றபின் நடந்த நாடளாவிய இனக்கலவரத்தின்போது பாராளுமன்றத்தில் தமிழ்ப்பிரதிகளை நோக்கிப் 'போரா? சமாதானமா? போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்' என்று கூறித் தமிழர்களுக்கு எதிரான போரைத் தொடக்கிவைத்தார். இந்த இனக்கலவரத்தின் பின்னணியில் அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் அமைச்சராக அங்கம்வகித்தவரும் தற்போதைய ஜனாதிபதி வேட்பாளர் சஜித்பிரமதாசாவின் தந்தையுமான ரணசிங்க பிரேமதாசாவே இருந்தார் எனப் பகிரங்கமாகவும் பரவலாகவும் பேசப்பட்டது. இத்தகைய ஐக்கிய தேசியக் கட்சியினதும் தந்தை ரணசிங்க பிரேமதாசாவினதும் பாரம்பரியத்தில் வந்த சஜித் பிரேமதாசா அவர்கள்தான் தேர்தலில் தமிழர்களின் வாக்குகளை வஞ்சகமாகப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் வகைதொகையின்றி வாக்குறுதிகளைத் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அள்ளி வீசியள்ளார். அவற்றை நம்பித் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அவரை ஆதரிக்கக் கோருவது 'அரசியல் மதியீனம்' ஆகும்.

ஜனாதிபதி வேட்பாளரான சஜித் பிரேமதாசா அவர்கள் கடந்த காலங்களில் பாராளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவும் பதவி வகித்தபோது எந்தச் சந்தர்ப்பத்திலும் இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றியோ அல்லது நாட்டின் எந்த எரியும் பிரச்சனைபற்றியோ கருத்துக்களை முன்வைத்ததில்லை. அந்த அளவிற்கு அவற்றில் அக்கறையற்றிருந்தார். வீடுகளைக் கட்டியது தவிர வேறொன்றும் அவர் செய்ய முயற்சித்ததும் இல்லை. சரணாலயங்களுக்குச் செல்வதிலும் யானைகள் பார்ப்பதிலும் பெரும் பொழுதைக் கழித்தவர். நாட்டின் எரியும் பிரச்சினையான தேசிய இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து அக்கறையற்றிருந்த - சமூகப்

தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்

பொறுப்பற்ற -முதிர்ச்சியற்ற ஒருவரினால் வழங்கப்பெற்ற வாக்குறுதிகளை நம்பித் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சஜித் பிரேமதாசாவிற்கு தமிழ்மக்களை வாக்களிக்கக் கோருவது தங்கள் 'சுயலாபம்' கருதியேதவிர இதில் தமிழ்மக்களுடைய சமூக பொருளாதார அரசியல் நலன்கள் கடுகளவும் இல்லை. அன்றியும், பண்டா – செல்வா ஒப்பந்தம் (1958) எழுத்தில்தானே இருந்தது. அது நிறைவேற்றப்பட்டதா? இல்லை. டட்லி – செல்வா ஒப்பந்தம் (1965) எழுத்தில்தானே இருந்தது. அது நிறைவேற்றப்பட்டதா? இல்லை. இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தமும் (1987) அதன் வாயிலாகக் கொண்டுவரப்பட்ட பதின்மூன்றாவது அரசியல் சட்டத்திருத்தமும் மாகாணசபை முறைமையும் எழுத்தில்தானே உள்ளன. அவை முப்பது வருடங்களைக் கடந்தும் இன்னும் அரசியல் விருப்பத்துடனும் அர்த்தமுள்ள வகையிலும் முழுமையாக நிறைவேற்றபடவில்லையே? அவ் ஒப்பந்தத்தை மூர்க்கமாக எதிர்த்த ரணசிங்க பிரேமதாச அவர்களின் மகனான சஜித்பிரேமதாச அதிகாரப்பகிர்வைத் தமிழர்களுக்கு வழங்குவாரா? இல்லவே இல்லை.

மேலும், இலங்கை சுதந்திரமடைந்து (1948) இன்றுவரையுமுள்ள எழுபது வருடகாலத்தில் சகோதர இனங்களான இலங்கை முஸ்லீம்களும் மலையகத் தமிழர்களும் அடைந்துள்ள சமூக பொருளாதார அரசியல் முன்னேற்றங்களை எழுத்தில் வாங்கிக்கொண்டா பெற்றுக்கொண்டார்கள்? இல்லையே. தாங்கள் கையாண்ட அரசியல் அணுகுமுறைகளின் மூலமும் உபாயங்கள் மூலமும்தான் பெற்றுக்கொண்டார்கள். அத்தகைய அரசியல் வல்லமை அவர்களுடைய அரசியல் தலைமைகளிடம் இருந்தன. ஆனால் வடக்குக் கிழக்குத் தமிழர்களைப் பொறுத்தவரை அதிலும் குறிப்பாகக் கிழக்குத் தமிழர்களைப் பொறுத்தவரை கடந்த எழுபது வருட காலமாகத் தமிழரசுக் கட்சியையும் - தமிழர் விடுதலைக் கூட்டணியையும் - தமிழ்த் தேசியக்கூட்டமைப்பையும் நம்பித் தொடர்ந்து ஏமாந்ததுதான் மிச்சம். தமிழ் மக்களின் சமூக பொருளாதார அரசியல் தேவைகளை வென்றுதரக்கூடிய அரசியல் வல்லமை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிடம் இல்லை என்பது கடந்த நான்கரை வருடகால 'நல்லாட்சி' அரசாங்க காலத்தில் நிரூபணமாகியுள்ளது. தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு கடந்த காலத் தேர்தல்களில் தங்களது தேர்தல் விஞ்ஞாபனங்களில் உறுதியளித்தவற்றையே நிறைவேற்றித் தராதபோது இன்னொருவரின் - சஜித்பிரேமதாசாவின் தேர்தல் விஞ்ஞாபன வாக்குறுதிகளை நிறைவேற்றி வைப்பார்கள் என்பது நடக்கப் போவதில்லை. இது வெறும் வழமையான ஏமாற்று நாடகமே தவிர வேறொன்றுமில்லை.

எழுத்தில் உள்ளவையெல்லாம் நிறைவேற்றப்படும் என்பதோ அல்லது

தொடர்ச்சி பக்கம் 15



# இமாலய சாதனை புரிந்த ''தேனகச் செம்மல்'' செ.இராஜதுரை

## அத்தியாயம்-20

### பேச்சுத்துறையில் இராஜதுரை

மறைந்து போன மாண்பு மிக்க தமிழகத்தின் மங்காச்சரித்திரம் மறத்தமிழனின் கறைபடிந்த வரலாறு. எந்த இனம் தன் இறந்தகாலப் பெருவாழ்வை எண்ணிப்பார்க்க தவறிவிட்டதோ, எந்த நாடு தன் கடந்தகாலச் சிறப்பைச் சிந்தித்து செயலாற்ற முனையாது உறங்கிவிட்டதோ, அந்த இனம் அடிமைத்தனத்தின் பாதையிலே அழிவின் விளிம்பிற்கே சென்று விட்டதென்பது தான் அர்த்தம்.

தமிழினம் இன்றுதான் தன் தவறை உணர ஆரம்பித்திருக்கிறது. தமிழிலே எழுத வேண்டுமென்றும் ஆசை; தமிழிலே பேச வேண்டுமென்ற தணியாத ஆவல். தமிழ்நூல்களை; கலைகளை; பண்பாட்டினைப் பரப்புதல் வேண்டும்; பாதுகாக்க வேண்டும் என்னும் ஆர்வம் தமிழ்மக்களிடம் குறிப்பாக இளைஞர்களிடம் ஏற்பட்டிருக்கிறது. இவ்வெழுச்சி தமிழகத்தின் மூலை; முடுக்குகளெல்லாம் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

எனக்கு அளிக்கப்பட்ட நேரத்தில் நாம் பிறந்த பொன்னாட்டை ஓரளவு உங்கள் முன் படம் பிடித்துக் காட்டியுள்ளேன். நீங்கள் இனி பேச்சுக்கு அழைப்போரிடம் உங்கள் தாய் நாட்டைப்பற்றி மேலும் தெரிந்து கொள்ள விழையுங்கள். அடுத்தவர் தாயோடு உங்கள் பிறந்த பொன்னாட்டை ஒப்பிட்டுப் பார்க்க முனையுங்கள்.

ஐரோப்பாவிலிருந்து பாரத நாடுவரை படை நடத்திவந்த மாவீரன் அலெக்ஷாந்தரையும்; இமயவரம்புவரை எதிரிகளே இல்லாது ஒரு குடையின் கீழ் அரசு புரிந்த செங்குட்டுவனையும் சேர்த்துப் பேசுமாறு கேளுங்கள்.

கடற்படைகண்ட நெல்ஸனையும்; வீர நெப்போலியனையும்; கடாரம்; சாவகம்; புட்பகம் ஆகிய நாடுகளைக் கடல் தாண்டிக் கைப்பற்றிய திருமால்வளவனையும் பேசுமாறு சொல்லுங்கள்.

பாரைக்குலுக்கிய போரெனப் பிரஞ்சுநாட்டின் முப்பதாண்டு யுத்தத்தை வர்ணிக்கும் நீங்கள் பாரத நாட்டைக் கலக்கிய கலிங்க யுத்தத்தைப் பற்றிப் பேசுமாறு பணியுங்கள்.

மாவீரன் மைக்கல் கொலின்சையும்; மறத்தமிழன் கட்டபொம்மனையும் பேசுமாறு கேளுங்கள்.

அடிமை விலங்கறுத்த



ஆபிரகாம்லிங்கனையும்; அன்னை மொழியைக்காக்க உயிர்நீத்த தாளமுத்து நடேசனையும் பேசுமாறு கேளுங்கள்.

கலாபூசணம் அரங்கம்
இரா. தவராஜா

அறிவு மழுங்கிக்கிடந்த அமெரிக்க நாட்டில் பகுத்தறிவுச் சுடரை ஏந்திக் கிளர்ச்சி செய்த இங்கர்ஸானையும்; அறியாமையிருளில் திக்குத்தெரியாது அலைந்த தமிழ் மக்களை விழிப்புணர்ச்சியூட்டிய பெரியார் ஈ.வே.ராவையும் பேசுமாறு பணியுங்கள்.

ஆங்கில நாட்டு ஷெல்லியையும்; புஸ்கினையும்; தமிழகத்தின் பாரதியையும் பேசுமாறு கேளுங்கள். அமெரிக்க நாட்டுப் புரட்சிக் கவிஞன் வால்ட்விட்டமனையும்; பைந்தமிழுக்கு வித்திட்ட பகுத்தறுவுக் கவிஞன் பாரதி தாசனையும் பேசுமாறு கேளுங்கள். அப்போது தெரியும் நம் அன்னை நாட்டின் பெருமையும்; அன்னை மொழியின் அருஞ்சிறப்பும் "செந்தமிழுக்கு தீமை வந்த பின்பு இத்தேகமிருந்ததொரு லாபமுண்டோ?" என்று பாரதிதாசனின் கருத்துக்களை நம் இதயங்களில் பதித்து எதிர் காலத்தில் காரியமாற்ற முனைவோம்.

என் பேச்சின் போது உங்களுக்கு சந்தேகங்கள்; முரண்பாடுகள்; தோன்றியிருந்தால் எந்தச் சமயத்தில் நீங்கள் அழைத்தாலும் போதிய விளக்கமும்; விபரமும் தர என்றும் நான் ஆயத்தமாயிருக்கிறேன்.

இந்த சந்தர்ப்பத்தை எனக்களித்த உங்களுக்கும்; உங்கள் தலைவியாருக்கும் என் உளம் நிறைந்த நன்றிகள். வணக்கம்!

வாசகர்களே! இத்தோடு சொல்லின் செல்வனின் ஏனைய பேச்சுப் புத்தகங்களின் பேச்சை தொடராமல்; அவரின் அரசியல் துறைக்குள் நுழைகின்றேன். (தொடரும்)




# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:

" அலையப்போடி நல்லரெத்தினம் (ஸ்தாபகர்)
அறிவாலயம் அறக்கட்டளை நிதியம்
பண்டாரியாவெளி கொக்கட்டிச்சோலை "

## ஜனாதிபதி தேர்தல்: படுவான்கரை மக்கள் என்ன பேசுகின்றனர்?



படுவான் பாலகன்

தேர்தல் என்றால்தான் படுவான்கரை பகுதி பலரின் கண்களுக்குத் தெரியும். தேர்தல் நிறைவுபெற்றால் படுவான்கரைப்பூமி வெறிச்சோடிக்கிடக்கும் என சாமித்தம்பி கனகசபையுடன் பழுகாமத்து சந்தியில் நின்று பேசிக்கொண்டிருந்தான். தேர்தல் நெருங்க நெருங்க படுவான்கரைப் பிரதேசத்திலும் கட்சிகள் ஓடி ஓடி கூட்டங்கள் நடாத்துகின்றன. ஒவ்வொரு வேட்பாளர்களும் மேடை போட்டு பிரச்சாரங்களிலும் ஈடுபடுகின்றனர். கட்சி அலுவலகங்களும் முளைத்திருக்கின்றன. பிரசுரங்கள் ஒட்டுதலும் ஒட்டி ஒட்டியும்,



ஒட்டமாலும் ஒட்டப்படுகின்றன. மக்களின் கைகளுக்கும் பிரசுரங்கள் வழங்கப்படுகின்றன. ஏதேதோ கருத்துக்களைச் சொல்லியும் வாக்களியுங்கோ! எனவும் கூறுகின்றனர். என சாமித்தம்பியும் கூற.

கனகசபையும் பேச ஆரம்பித்தான் வேட்பாளர்களாக சஜித் பிறேமதாஸ, கோட்டபாய ராஜபக்ச களமிறங்கியிருந்தாலும், இங்கு படுவான்கரைப்பகுதியில் வாக்குகேட்டுப் போகின்றவர்கள் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்களே. இங்கு போட்டி தமிழ் கட்சிகளுடன்தான், சந்திரகாந்தன், வி.முரளிதரன், ச.வியாழேந்திரன் உள்ளிட்டவர்களின் கட்சிகள் ஒரு பக்கமாகவும் தமிழ்தேசிய கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகள் ஒருசாராருக்கு சார்பாகவும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இதில் எந்த அணியினர் கூடுதலான வாக்குகளை சேகரிப்பது என்ற போட்டியிலே ஈடுபட்டிருக்கின்றனர்.

மக்களை ஏமாற்றி வாக்கு வங்கிகளை நிரப்பலாம் என்ற நிலை படுவான்கரைப்பகுதியிலும் மாறியிருக்கின்றது. யாரை தெரிவு செய்ய வேண்டுமென்ற கருத்து மக்களிடையே இருக்கின்றது. அக்கருத்து தொடர்பில் அவர்களுக்குள் பேசிக்கொண்டிருக்கின்றனர். அதேவேளை தாம் ஏமாற்றப்படுகின்றமையையும், அபிவிருத்தியில் கண்டுகொள்ளப்படாமை குறித்தும் அங்கலாய்ந்துக் கொண்டு இருக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரும்பரந்த நிலப்பகுதி படுவான்கரைப் பகுதியே, தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பகுதியும் இப்பகுதியே. ஆனாலும் அரசியலில், அந்தஸ்தில் உள்ளவர்களும், அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் எழுவான்கரைப் பகுதியையே நாடுவதுண்டு. அபிவிருத்திகளும் அப்பகுதியிலேயே நடைபெறுவதுண்டு. தீர்மானங்களும் அங்கேயே எடுக்கப்படுகின்றன. தேவையேற்படும் போது மட்டும்தான் படுவான்கரை மக்கள் பலருக்கு தெரிவதுண்டு. இதனால்தான் இங்குள்ள மக்கள் வெறுப்புள்ளம் கொண்டவர்ளாக இருக்கின்றனர். வேலைவாய்ப்புக்களிலும், அடிப்படைத் தேவைகளை பெற்றுக்கொள்ளுவதிலும் பின்தள்ளப்பட்டிருக்கின்றனர். அரச நியமனங்களுக்கான வெற்றிடத்தினைக் காட்டும் பகுதியாக உள்ளதே தவிர, வெற்றிடத்தினை நிரந்தரமாக நிரப்பும் பகுதியாக இல்லை. பலநேரங்களில் அரசியலில் உள்ளவர்கள் இப்பகுதியை ஏறெடுத்து பார்ப்பதுமில்லை. எத்தனையோ தடவைகள் கூறியும் பலரின் காதுகளுக்கு சென்றடைவதுமில்லை. யானைப் பிரச்சினை, நீர்ப் பிரச்சினை, பயிர்செய்தல் பிரச்சினை, வீதிகள் சீரின்மை, போக்குவரத்தின்மை என பல பிரச்சினைகளுடன் இப்பகுதியில் உள்ள மக்கள் வாழ்கின்றனர். இலவசக்கல்வியைக் கூட சீராக பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். இவ்வாறான மக்கள் எதிர்பார்ப்பது தமது பிரதேசத்தின் பிரச்சினைகள், வாழ்வாதார உதவிகள் செய்யப்பட வேண்டும் என்பதனையே. இதைவிடவும் கடந்த காலங்களில் நொந்து வெந்து போய் இருக்கின்றனர். இன்னமும் அவ்வாறான துன்ப நிலைகளை எதிர்கொள்வதற்கும் தயாரில்லை. என்கிறார் கனகசபை.

படுவான்கரை மக்களின் காதுகளில் பூச்சுத்த நினைப்பதெல்லாம் பூச்சியமாகியுள்ள நிலையில், அவர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றுபவர்களையே ஆதரிப்பர். எனக்கூறியவனாக அவ்விடத்தினைவிட்டு இருவரும் அகன்று சென்றனர்.

கறுப்பு வெள்ளை

அரங்கம் பத்திரிகையில்
விளம்பரம் செய்ய
சிறப்புத் தள்ளுபடி!
கால்பக்கம் - ரூபா 2500
அரைப்பக்கம் - ரூபா 5000
முழுப்பக்கம் -
ரூபா 10,000
சிறுவிளம்பரங்கள் -
ரூபா 200 மாத்திரமே

## ஏசியன் விளையாட்டு கழகம் முதலிடம்









மது 27வது ஆண்டு நிறைவை முன்னிட்டு மட்டக்களப்பு விபுலானந்தா விளையாட்டு கழகம், அணிக்கு ஒன்பது பேர் கொண்ட 8 ஓவர் அடங்கலான கிரிக்கெட் சுற்றுப்போட்டியை நவம்பர் 9ம் 10ம் திகதிகளில் நடாத்தி இருந்தது.

இப்போட்டியில் ஆரயம்பதி ஏசியன் விளையாட்டு கழகம் முதலாமிடத்தை பெற்றுக் வெற்றிக்கிண்ணத்தையும் 30 ஆயிரம் ரூபாய் பணப்பரிசையும் இரண்டாமிடத்தை பெற்ற ஜோன் ரிமிக்ஸ் கழகம் வெற்றி கிண்ணத்தையும் 20 ஆயிரம் பணப்பரிசையும் மூன்றாமிடத்தை எவகிறீன் விளையாட்டு கழகம் வெற்றிக்கிண்ணத்தையும் பத்தாயிரம் ரூபாய் பணப்பரிசையும் பெற்றுக் கொண்டன.

# அக்கினி புலையவெளி
## உணவு உற்பத்திப் பொருட்கள்
### சைவ முறையில் தயாரிக்கப்பட்டது

AGNI PULAYAVELY INDUSTRIES

- சுவையான மரவள்ளிப் பொரியல்
- சுவையான மிக்சர் ஆகியன தற்போது எம்மால் விற்பனை செய்யப்படுகின்றன. தேவையானவர்கள் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

**தொலைபேசி இல:- 0771516203**

விலாசம் : அக்னி உற்பத்திகள், பதுளை வீதி, புலையவெளி, செங்கலடி. மட்டக்களப்பு

## மரவள்ளிக் கிழங்குச் சீவல்

1 கிலோ 400ரூபாய்



## மிக்சர்

1 கிலோ 400ரூபாய்



எம்மிடம் இருந்து இந்த உற்பத்திப் பொருட்களைப் பெற்று விற்பனை செய்ய விரும்புவோர் விலையைப் பேசித் தீர்மானிக்கலாம்.

கொள்வனவு செய்யப்படும் அளவினை பொறுத்து மட்டக்களப்பிற்கு உட்பட்ட பகுதிகளில் கொண்டுவந்து விநியோகிக்கப்படும்.

(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)


ජනාධිපතිත්
ශ්‍රී ලංකා පොදුජන පෙරමුණ
ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன
Sri Lanka Podujana Peramuna
ஜனாதிபதித்
தேர்தல்-2019
கிழக்கில் தமிழர் நாம் தலைநிமிர்ந்து வாழ
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் கௌரவ பசில் ராஜபக்ஷவின் வழிநடத்தலில் மட்டு. மாவட்ட அமைப்பாளர் திரு.ப.சந்திரகுமார் தலைமையில் மட்டக்களப்பில் மீண்டும் தமிழரின் கரங்களில் நில நிர்வாகம் செழிப்புற
கௌரவ கோத்தபாய ராஜபக்ஷவை
வெற்றி பெறச் செய்வோம்.
X

# நவீனகால மதியூகி சுமந்திரனுக்கு ஒரு கடிதம்

## நடேசன் - அவுஸ்திரேலியா



இராமாயணத்தில் வரும் பரதன் 14 வருடங்கள் இராமன் அமரவேண்டிய சிம்மாசனத்தில் அண்ணன் இராமனின் பாதுகையை வைத்து அரசாண்டான். அங்கும் ஆலோசகராக சுமந்திரன் என்ற மதியூகி இருந்ததாகக் கம்பன் கூறுகின்றான். அதைத் தெரிந்து கொண்டுதான் இலங்கை அரசியலில் நீங்கள் ஒரு மதியூகியாக வரவேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் உங்கள் பெற்றோர் உங்களுக்கு அந்தப் பெயரிட்டிருக்கிறார்கள் – என நினைக்கின்றேன்.

நீங்கள் நீடித்த ஈழப்போரின் பின்னர்தான் அரசியலுக்கு வந்தவர். எந்த இரத்தக் கறையும் படியாதவர் என்பது முக்கியமான இலட்சணம்.!

உங்களது அரசியல் பிரவேச ஆரம்ப காலங்களில் ஒரு நாள் இலங்கை பாராளுமன்றத்தில் நீங்கள் பேசியதைப் பார்த்தபோது, “ தமிழ் மக்களுக்கு நல்லதோர் பாராளுமன்ற உறுப்பினர் கிடைத்துள்ளார்“ என்ற நம்பிக்கை எனக்கு பிறந்தது.

நீங்கள் தாய்மொழியோடு ஆங்கிலமும் சிங்களமும் சரளமாகத் பேசத் தெரிந்த ஒருவர் என்பதோடு மெல்பனில் படித்தவரும் என்பதால் “சரக்குள்ள “ விஷயம் தெரிந்த மனிதர் என நினைத்தேன். மெல்பனில் உங்களை சந்தித்துப் பேசியபோது, “ இலங்கை அரசாங்கத்தின் நிலை புரிந்தவராக இருக்கும் நீங்கள் சார்ந்துள்ள கட்சி ஏன் இப்படி நடந்துகொள்கிறது..? “ எனக்கேட்டபோது “ மக்களை விட்டு விட்டு நாம் ஒரு முடிவும் எடுக்க முடியாது. அவர்களையும் சேர்த்துக் கொண்டுதான் செல்லவேண்டும். “ என்றீர்கள்.

அப்பொழுதும் உங்களை ஒரு நம்பிக்கை நட்சத்திரமாகத்தான் பார்த்தேன் . அத்துடன், விடுதலைப்புலிகளும் பல மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள் எனவும் பகிரங்கமாகக் கூறினீர்கள்.

அதற்கப்பால், வடபகுதியிலிருந்து இஸ்லாமியர்கள் வெளியேற்றப்பட்டதற்கு ஒரு தமிழனாக மன்னிப்பும் கேட்டீர்கள் .

நீங்கள் சொல்லியிருக்கும் இந்த விடயங்கள் யாவும் முன்னர் எனது இதயத்தையும் நெருடிக்கொண்டிருந்தவை.

அதனால், உங்கள் கூற்றுக்களினால் நான் மகிழ்ந்திருக்கின்றேன்.

ஒருவர் பாராளுமன்ற அங்கத்தினராகவோ அல்லது சமூகத் தலைவராகவோ மக்கள் முன்னிலையில் வரலாம். பேசலாம், சிறை செல்லலாம், ஏன் பிரபாகரன் போன்று போர்க்களத்தில் உயிரும் துறக்கலாம் ! ஆனால், அவர் சமூகத்திற்காக எதனைப் பெற்றுத்தந்தார்..? என்பது மாத்திரமே வரலாற்றில் பேசப்படும்.

விவசாயி ஏர்கொண்டு நிலத்தை ஆழமாக உழுவதனாலோ அல்லது அவனது தோட்டத்தில் கிணறை ஆழமாக கிண்டுவதாலோ அவனது குடும்பம் நிறைவடைவதில்லை. பட்டினியிலிருந்து வெளிவருவதில்லை. காந்தி , மண்டேலா போன்றவர்கள் முறையே சத்தியாக்கிரகம் செய்ததாலோ அல்லது அதிக காலம் சிறையிலிருந்ததாலோ பேசப்படவில்லை. அவர்கள் மக்களுக்கு ஏதோ ஒன்றைப் பெற்றுத்தந்தார்கள்.

மார்ட்டின் லூதரால் கறுப்பு அமெரிக்கர்களுக்கு சம உரிமை கிடைத்தது. இவர்களை விட எத்தனையோ பேர் இப்படியான முயற்சிகளில் உயிர் இழந்தோ அல்லது சிறை சென்றோ இருப்பார்கள். அவர்களையும் கூட எவரும் நினைப்பதில்லை.

போரின் விளைவுகளைச் சந்தித்த ஒரு சமூகம் உங்களையும் உங்கள் கட்சியையும் நம்பி பேராதரவு கொடுத்து பாராளுமன்ற கதிரைகளைத் தந்தார்கள். உங்களது புகழ் மற்றும் சிறப்புகள் அவர்களால்தான் உங்களுக்கு கிடைத்தன. ஆனால், அவர்களுக்கு நீங்களோ, உங்களது கட்சியோ எதுவும் பெற்றுக் கொடுக்கவில்லை என்பதும் உங்களுக்குத் தெரியும் .

உங்களால் மக்களுக்கு லாபமில்லை என்பது ஒரு புறமிருக்க, அதற்குப்பதிலாக நம்பிக்கைத் துரோகங்களைத்தான் அவர்களுக்கு பரிசாக்கியிருக்கிறீர்கள் .

“நான் எனது கட்சிக்குத் தலைவரில்லை! ஏன் என் மீது குற்றம் சுமத்துகிறீர்கள் ..? “ என நீங்கள் கேட்கலாம்.. ! இராஜவரோதயம் சம்பந்தன் என்பவர் முகமூடியாக மாத்திரமிருக்கிறார். அவர் சார்பில் நீங்களே முடிவெடுக்கிறீர்கள் என்பது எல்லோருக்கும் நன்கு தெரிந்த விடயம். அதனால் உண்மையைப் பேசிவிடுவோம் .

கடந்த இரண்டு தடவைகளும் பாராளுமன்ற உறுப்பினராக நீங்கள் இருந்து செய்த சாதனைகளை நீங்களே சீர்தூக்கிப் பார்த்திருக்கிறீர்களா..?

நீங்கள் செய்த மூன்று விடயங்கள் மிகவும் பாரதூரமானவை. அதில் கொடுமையானது நீங்கள் சம்பந்தனோடு சேர்ந்து எந்த தகுதியுமில்லாத ஒருவரை கொண்டுவந்து வடமாகாண சபையின் அரியணையில் ஏற்றியது!? அவர் அதில் அமர்ந்து தமிழ் மக்களுக்கு செய்தது என்ன?

அவருக்குப் பதிலாக வடமாகாணத்தில் விளையும் பனங்கொட்டையொன்றை முதல்வராக்கியிருந்தால் அதிகாரிகள் தங்கள் வேலையைச் செய்திருப்பார்கள். அரசாங்கம் அபிவிருத்திக்காக அனுப்பிய பணம் திரும்பியிராது ! அந்தப் பணத்தில் எத்தனை வடமாகாணத்தவர்கள் வேலை வாய்ப்பு பெற்றிருப்பார்கள் ? ஏன், ஊழல் நடந்திருந்தால்கூட அந்தப்பணம் யாழ்ப்பணத்திலே தங்கியிருக்கும்.

இரண்டாவதாகக் கிழக்கு மாகாணத்தில் முதலமைச்சராக முடிந்தவரையில் மக்களுக்கு நல்ல காரியம் செய்த பிள்ளையான் எனும் சிவநேசதுரை சந்திரகாந்தனை சிறையில் அடைப்பித்தீர்கள். இவ்விடத்தில், ஒரு கேள்வி உங்கள் கட்சியில் கொலை செய்தவர்கள் எவருமில்லையா? உண்மையில் ஆலால சுந்தரம், தர்மலிங்கம் போன்றவர்களை கொலை செய்தவர்கள் யார்? அதை விடப் பலர் உங்கள் பக்கத்திலே இருக்கிறார்கள்!

இறுதியாக மற்றும் ஒரு விடயம்: கடந்த பத்துவருடங்களாக ஜெனிவாவில் தமிழர்களுக்கு ஏதோ நடக்குமென மக்களை ஏமாற்றிவந்தீர்கள். வெளிநாட்டுத் தமிழர்கள் பலர் சுயநலமாகச் சேர்த்த பணத்தை கணக்குக் காட்டவும், மேலும் அகதி அந்தஸ்துக்காகவும் செய்த இந்த களியாட்டத்தில் நீங்களும் பங்கு பற்றினீர்கள். தற்பொழுது நடந்தது என்ன?

தற்போதைய அரசியலில் தமிழ் மக்கள் யாரை ஆதரிப்பது ? என முடிவு செய்வதற்கே தலையை பிய்த்திருக்கிறீகள். இறுதியில் சஜீத் பிரேமதாசவிற்கு ஆதரவு கொடுப்பதற்கு முன்வந்திருக்கிறீர்கள். அதை வரவேற்கின்றேன் . காரணம் அதனால் சிங்கள மக்களின் வாக்குகள் எதிர் பக்கத்திற்குச் செல்லலாம்.

தமிழர்கள் இலங்கையின் இரண்டு பிரதான கட்சிகளை ஆதரித்து, தமிழ் மக்களுக்குப் பலவற்றைப் பெற்றுக்கொடுக்கவேண்டு மென்பதே எனது அவா. கடந்த முறை இன்றைய அரசை ஆதரித்த நீங்கள் கடந்த வருடங்களில் எதுவும் பெறவில்லை. அதற்கு முன்னர் மகிந்த அரசை எதிர்த்தும் எதுவும் பெறவில்லை .

சரத் பொன்சேகாவை ஆதரித்து என்ன பெற்றீர்கள்?

போரில் ஈடுபட்ட மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்தது கொள்கை ரீதியானது என்றால், இராணுவத்தளபதியாக யுத்த களத்தில் இருந்த சரத்பொன்சேக்கா எப்படி தூய்மையான மனிதராகின்றார்?

மனித உரிமை மீறல் கடைசி யுத்தத்தில் மட்டுமா நடந்தது?

சமகால தற்போதைய அரசை உருவாக்கி ஆதரித்த சந்திரிகா அம்மையார் பதவியிலிருந்த காலத்தில் யுத்தக்குற்றங்கள் நடக்கவில்லையா…? முன்னாள் ஜனாதிபதிகளான பிரேமதாச மற்றும் ஜெயவர்தனா காலத்தில் தர்மப்போரா நடந்தது..?

இதிலிருந்து என்ன தெரிகிறது..? கொள்கைக்காக நீங்கள் ஆதரிக்கவில்லை என்பது புரிகிறது. நானும் கொள்கைகளில் தொங்குபவனில்லை. யதார்த்தவாதி.

கடந்த அரசாங்கத்தை ஆதரித்து சில அமைச்சர் பதவிகளை பெற்று, மக்களுக்கு ஏதாவது செய்திருந்தால் கொஞ்சம் ஆறுதலாக இருந்திருக்கும். கற்புடன் இருப்பதாக வெளியே காண்பித்தவாறு மறுபக்கத்திற்கு மட்டும் சிவப்பு விளக்கெரித்தீர்கள் என்பதே உண்மை.

என்னைப் பொறுத்தவரையில் சஜீத் பிரேமதாச வந்தாலும் நீங்கள் கோரிக்கைகளிலும் அறிக்கைகளிலும்தான் நாட்களைக் கடத்துவீர்கள். கோத்தபாய இராஜபக்ஷ பதவிக்கு வந்தால் என்ன செய்வீர்கள் ? மீண்டும் உங்கள் இந்தியப் பயணம் - ஜெனீவா பயணம் தொடரும்.

தமிழர்களுக்கு தற்போது நீங்கள் செய்யக்கூடியது : “ தற்போதைய நிலையில் நீங்களே உங்களைப் பார்த்துக் கொள்ளுங்கள். யாரை ஆதரித்தால் மக்களுக்கு நன்மை உண்டு என்பதை அவர்களே தீர்மானிக்கட்டும் “ என விட்டு விட்டு உங்களது தொழிலைப் பாருங்கள்.

பாவப்பட்ட மக்கள் முப்பது வருடப்போரில் உயிர்தப்பி வாழ்ந்தார்கள். அப்பொழுது அவர்களுக்காக எவருமிருக்கவில்லை. அதேபோன்று வாழ்ந்துவிட்டுப் போவார்கள். அவர்களுக்கு அதிர்ஷ்டமிருந்தால் நல்ல மேய்ப்பன் ஒருவன் கிடைப்பான்.

“ இலங்கைத் தமிழர்கள் முதலில் அகிம்சைப்போர் நடத்தினார்கள். பின்னர் ஆயுதப்போர் நடத்தினார்கள். தற்போது இராஜதந்திரப்போர் நடத்துகிறார்கள்.“ என்று நீங்கள் மெல்பன் நகரில் சில வருடங்களுக்கு முன்னர் நடந்த கூட்டமொன்றில், உங்களை வரவேற்றவர்கள் முன்னிலையில் பேசினீர்கள். நினைவிருக்கிறதா..?

இப்போது, புதிய அதிபருக்கான தேர்தல் வரும்வேளையில், யாரை ஆதரிப்பது என்பதைவிட, யாரை தோற்கடிக்கவேண்டும் என்பதைபற்றி பேசுகிறீர்கள்.

இதுதான் நீங்கள் சொல்லவரும் இராஜதந்திரப்போருக்கான வழிமுறையா..? சொல்லுங்கள் மதியூகி சுமந்திரன் அவர்களே..?

# கிழக்குத்தமிழர்கூட்டமைப்பின்கோரிக்கைகள்



*29.10.2019 அன்று மட்டக்களப்பு கல்லடிப் பாலம் விளையாட்டுத் திடலில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்ட மேடையில்வைத்து 'ஸ்ரீலங்கா பொது ஜனபெரமுன' ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ச அவர்களிடம் கிழக்குத் தமிழர் கூட்டமைப்பினால் கையளிக்கப்பட்ட அறிக்கையின் தமிழ்ப்பிரதி*

**அரசியல்**

1. இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு நோக்கிய செயற்பாடுகளின் முதற்கட்டமாக 13வது அரசியல் சட்டத் திருத்தத்தை அர்த்தமுள்ள விதத்தில் முழுமையாக அமுல் செய்தல்.

2. கிழக்கு மாகாணத்துக்கான ஆளுநராக தமிழர் ஒருவர் நியமனம்.

**கிழக்கு மாகாணத்துக்கான பொதுவான கோரிக்கைகள்**

1. இற்றைவரை கடந்தகால வன்செயல்களினாலும், யுத்தத்தினாலும், பாதிப்புற்று எவ்வித தொழிலும் செய்ய முடியாது இருக்கும் முன்னாள் போராளிகள் உட்பட அங்கவீனமானவர்களுக்கு மாதாந்தம்; பதினையாயிரம் (15,000ரூ-) ரூபாவுக்குக் குறையாத உதவித் தொகை வழங்கல்.

2. போரினால் பாதிக்கபட்ட பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களுக்கும் போரின் விளைவுகளால் காணாமல்போன ஆட்களில் தங்கியுள்ளவர்களுக்கும் மாதாந்தம் பத்தாயிரம் (10,000ரூ); ரூபாவுக்குக் குறையாத கொடுப்பனவு வழங்கல்.

3. எதிர்காலத்தில் கிழக்கில் மதுபானசாலை அமைப்பதற்கான உத்தரவுப் பத்திரம் வழங்கலைத் தவிர்த்தல் மற்றும் தற்போது பாடசாலைகள், ஆலயங்கள் அமைந்த சூழலில் உள்ள மதுபானசாலைகளை அகற்றல்.

4. பாடசாலைகளில் தற்போது நிலவும் ஆசிரிய வெற்றிடங்கள் அனைத்தும் நிரப்பப்படுவதோடு தொண்டர் ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கல்.

5. கிழக்குப் பல்கலைக் கழகம், சுவாமி விபுலாநந்தா அழகியற் கற்கைகள் நிறுவகம், கல்வியற் கல்லூரி மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகள் என்பனவற்றின் உட்கட்டமைப்பு வசதிகள் இலங்கையிலுள்ள ஏனைய உயர் கல்வி நிறுவனங்களின் தரத்துக்குச் சமமாக அபிவிருத்தி செய்யப்படுதல்.

6. கிழக்குப் பல்கலைக் கழக திருகோணமலை வளாகம் முழுமையான பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்தப்படல்.

7. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கிழக்கிலுள்ள விவசாய மற்றும் நீர்ப்பாசன வசதி உட்கட்டமைப்புக்களைப் புனரமைத்தல்.
8. ஒவ்வொரு கிராமங்களினது வளங்களை அடையாளம் கண்டு அவற்றைப் பூரணமாகப் பயன்படுத்துவதற்காக அவ்வப் பிரதேச கமத்தொழில் விரிவாக்க நிலையங்களை பலப்படுத்தி இயங்கவைத்தல்.

9. விவசாயிகள் தங்கள் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்காக கூட்டுறவு விற்பனை நிலையங்களை பலப்படுத்தி விரிவாக்கம் செய்தல்.
10. விவசாயம், விலங்கு வேளாண்மை, மீன்பிடி, தெங்குப்பயிர்ச் செய்கை மற்றும் மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை போன்ற கிழக்குமாகாணத்திற்குப் பொருத்தமான பாரம்பரிய விவசாய முறைகளை நவீன மயப்படுத்தி அதுசார்ந்த துறைகளை வினைத்திறனுற்றதாக இயங்கவைத்தல்.

11. கிழக்கின் கரையோரப் பிரதேசங்களிலும் தரிசான மேட்டு நிலங்களிலும் பனங்கன்று நடுதலும் பனைசார் பொருளாதாரத்தினை கட்டியெழுப்புதலுக்கான நடவடிக்கைகள் எடுத்தல்.

12. மட்டக்களப்பிலிருந்து வலையிறவுப் பாலத்தினூடாக வவுணதீவு – குறிஞ்சாமுனை – கொக்கட்டிச்சோலை – மண்டூர் – மல்வத்தை – அக்கரைப்பற்று – சாகாமம் - காஞ்சிரங்குடா வழியாகப் பொத்துவில் வரையான புகையிரதப் பாதை நிர்மாணம்.

13. மட்டக்களப்புக்கும் கொழும்புக்கு மிடையிலான அதிவேகப்பாதை அமைத்தல்

14. பயங்கரவாத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு இதுவரை வழக்குத் தொடரப்படாமல் இரண்டு வருடங்களுக்குமேல் தடுப்புக்காவலில் உள்ளவர்களை; விடுதலை செய்தல்.

15. அனைத்து அரச நியமனங்களிலும் தற்போது நிலவும் இனவிகிதாசாரக் குறைபாடு சீர்செய்யப்படுவதுடன் எதிர்காலத்தில் இடம்பெறும் சகல அரச நியமனங்களிலும் இன விகிதாரத்தைப் பேணுதல்.

16. யுத்தத்தினாலும் இயற்கை அனர்த்தங்களினாலும் வீடுகளை இழந்து இதுவரை நிவாரணம் வழங்கப்படாதவர்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக் கொடுத்தல்.

17. யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து இதுவரை தங்கள் பழைய சொந்த இடங்களில் குடியேறாதவர்களை மீளக் குடியமர்த்தல்.

**மாவட்ட ரீதியிலான அபிவிருத்திக் கோரிக்கைகள்**
**மட்டக்களப்பு மாவட்டம்**
1. கரடியனாறு விவசாயப் பண்ணையை முழுமையாக நவீனமயப்படுத்தி இயங்கவைத்தல்.

2. வாழைச்சேனை கடதாசி ஆலையினை இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

3. மண்டூர் ஓட்டுத் தொழிற்சாலையினை இயங்கவைத்தல்.

4. திக்கோடை, தேவபுரம் ஆகிய இடங்களில் அரச அரிசி ஆலைகளை அமைத்தல்.

5.குறுமண்வெளி – மண்டூர் பாலம் நிர்மாணம்.
6. கல்லடியில் மீன்; பதனிடும் தொழிற்சாலை அமைத்தல்

7. கும்புறுமூலை அரச அச்சகக் கூட்டுத் தாபனத்தை மீள இயங்கச் செய்தல்

8. கோட்டைக்கல்லாறு – பெரியகல்லாறு மீன்பிடித்துறைமுகம் அமைத்தல்

9. வாகரையில் சூரிய ஒளி மின்சார உற்பத்தி நிலையம் அமைத்தல்

10. மட்டக்களப்பு முகத்துவாரத்தில் மீன்பிடி இறங்கு துறை அமைத்தல்

11. சந்திவெளி – திகிலவெட்டைப் பாலம் நிர்மாணம்

12. கிண்ணையடி – முறுக்கன்தீவு பாலம் நிர்மாணம்

13. வெல்லாவெளியில் ஆடைத் தொழிற்சாலை நிறுவுதல்

14. கிரான்புல் அணைக்கட்டு நிர்மானம்

15. லாவணை ஆறு அணைக்கட்டு அமைத்தல்

16. படுவான்கரைப் பிரதேசத்தில் தொழில்பேட்டை அமைத்தல் (மட்டக்களப்பு வாவியின் மேற்குக்கரைப் பிரதேசம்)

17. போரதீவுப் பற்றுக்கான கல்விவலயம் அமைத்தல்

18. மட்டக்களப்பு மாவட்டத்துக்கான மேய்ச்சல்தரை விருத்தி

19. தும்பங்கேணி ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் புனரமைக்கப்படல்.

20. கால்நடை சினைப்படுத்தல் நிலையம் ஆயித்தியமலையில் அமைத்தல்.

21. செங்கலடியில் தகவல் தொழில்நுட்ப பூங்கா

**திருகோணமலை மாவட்டம்**
1. வெருகல் ஆறு அணைக்கட்டு நிர்மாணம்

2. பட்டித்திடலில் அரிசி ஆலை நிறுவுதல்

3.பாட்டாளிபுரம் ஆடைத் தொழிற்சாலையை மீள இயங்க வைத்தல்

4. குச்சவெளி, கப்பல்துறை ஆகிய இடங்களில் ஆடைத் தொழிற்சாலைளை நிறுவுதல்

5. சம்பூரில் சூரிய மின்சார உற்பத்தி நிலையம் அமைத்தல்

6. நிலாவெளியில் உப்பள நிர்மாணம்

7. நிலாவெளி, குச்சவெளி, கடற்கரைச்சேனை ஆகிய இடங்களில் மீன்பிடி இறங்குதுறையமைத்தல்

8. திருகோணமலை மாவட்டத்துக்கான மேய்ச்சல்தரை விருத்தி

9. தகவல் தொழில்நுட்பப் பூங்கா கப்பல்துறையில் அமைத்தல்

10. கால்நடை சினைப்படுத்தல் நிலையம் கடற்கரைச் சேனையில் அமைத்தல்

11. திரியாயில் விவசாய கைத் தொழில்சாலை அமைத்தல்

12. கந்தளாய் சீனித் தொழிற் சாலையினை மீள இயங்கவைத்தல்.

13. கங்குவேலியில் பால் சேகரிப்பு மற்றும் பால்பதனிடும் தொழிற்சாலையினை நிறுவுதல்

14. மூதூரில் கலாசார மத்திய நிலையம் அமைத்தல்

15. கன்னியாவில் பொருளாதார வலயம்

**அம்பாறை மாவட்டம்**
1. கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை முழுமையாகத் தரமுயர்த்தல்.

2. கோமாரிப் பிரதேசத்தில் மூங்கிலாறுக் குளம் நிர்மாணம்

3. கோமாரிப் பிரதேசத்தில் செல்வபுரம் சுற்றுலாத்துறை மையம்

4. பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவில் கனகர்கிராமம் மீள் குடியேற்றம்
5. கோமாரியில் உள்ளூர் விமானநிலையம் திறத்தல்

6. கோமாரியில் தொழில் நுட்பக் கல்லூரி நிறுவுதல் பல்கலைக் கழகம் அமைத்தல்
7. கோமாரியில் மீன்பிடி பயிற்சிக் கல்லூரி மற்றும் மீன்பதனிடும் தொழிற்சாலை அமைத்தல்

8. உமிரியில் மீன்பிடித்துறைமுகம் அமைத்தல்

9. தங்கவேலாயுதபுரத்தில் விவசாயப் பயிற்சிக் கல்லூரி அமைத்தல்

10. சாகாமம், சவளக்கடை ஆகிய இடங்களில் ஆடைத்தொழிற்சாலை அமைத்தல்

11. பொத்தானை மற்றும் புளியம்பற்று ஆகிய இடங்களில் நீர்ப்பாசனக் குளங்களின் நிர்மாணம்

12. சாகாமம் மற்றும் சவளக்கடை ஆகிய இடங்களில் அரிசி ஆலைகள் அமைத்தல்
13. தாண்டியடி கோரக்களப்பு உவர்நீர் தடுப்பு திட்டம் மற்றும் பால நிர்மாணம்

14. வட்டுமடு மேய்ச்சல்தரை அபிவிருத்தியும் பால்சேகரிப்பு மற்றும் பால் பதனிடும் நிலையமும்

15. காரைதீவில் தகவல் தொழிநுட்ப பூங்கா
16. கிட்டங்கியில் ஏற்று நீர்ப்பாசனம் அமைத்தல்

17. பாண்டிருப்பில் கனரக இயந்திரங்களுக்கான இயந்திர வேலைத்தளம் ஒன்றினை நிறுவுதல்.

18. கண்ணகிபுரத்தில் கால்நடை சினைப்படுத்தல் நிலையம்

19. பொத்துவில் ஊரணியில் பொருளாதார வலயம்

**கிழக்குத்தமிழர் கூட்டமைப்பின் சார்பில்,**

- **கிழக்குத்தமிழர் கூட்டமைப்பின் தலைவர், முன்னாள் பிரதேச பொறியியலாளர் த. கோபாலகிருஸ்ணன்,**

- **கிழக்குத்தமிழர் கூட்டமைப்பின் செயலாளர் முத்து இருளன் முருகன்,**

- **முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், அகில இலங்கை தமிழர் மகாசபைத் தலைவர் எந்திரி. கலாநிதி கா. விக்னேஸ்வரன்,**

- **முன்னாள் அமைச்சுச் செயலாளர், கிழக்கு மாகாண சபை எந்திரி. கி. பாஸ்கரதாஸ்,**

- **முன்னாள் அமைச்சர், கிழக்கு மாகாண சபை து. நவரட்ணராஜா**

**ஆகியோரால் 29.10.2019 அன்று மட்டக்களப்பில் ஜனாதிபதித் தேர்தல் பிரச்சார கூட்ட மேடையில் வைத்துச் சமர்ப்பிக்கப்பெற்றது.**

# விளையாட்டு

## கோட்டைமுனை விளையாட்டுக் கிராமத்தின் ஏனைய முயற்சிகள்



மட்டக்களப்பில் கிரிக்கெட் விளையாட்டை ஊக்குவிக்கும் வேலைத்திட்டத்தில் கோட்டைமுனை விளையாட்டு கிராமம் EPP எனும் அமைப்பை உருவாக்கி 13 மற்றும் 15 வயதிற்குட்பட்ட இளம் வீரர்களை இனம் காணும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்து 11.10.2019 அன்று முதல் சிநேகபூர்வ போட்டியையும் நடாத்தி இருந்தது.

இவ்வமைப்பிற்கு பலரிடம் இருந்து பல ஆதரவு தற்போது கிடைத்து வருகின்றது இலங்கை லயன்ஸ் கழகம் மாவட்ட ஆளுனரும் (306 C2 2020-2021)தேசிய மயப்படுத்தப்பட்ட இலங்கை கிரிக்கெட் ஒன்றியத்தின் உபதலைவருமான LION ரொசான் காஞ்சன யாப்பா (MJF)அவர்கள் EPPயின் பயிற்சி பாசறையை பார்வையிட்டதுடன் அவர்களுக்கான ஆலோசனைகளை வழங்கி தேவைப்படும் உதவிகளையும்



வழங்குவதாக உறுதியளித்துள்ளார். இதன் போது கோட்டைமுனை விளையாட்டு கிராமத்தின் தலைவர் இ.சிவநாதன் உறுப்பினர்களான த.சஜிதராஜ் ஆர்.உமாபதி EPPயின் திட்ட ஒருங்கினைப்பாளர் திரு. வசந்தமோகன் பயிற்றுவிப்பாளர்களான திரு.மதிகரன் திரு.ராஜாஜி ஆகியோரும் உடனிருந்தனர்.

## இருபதுக்கு 20 தொடரை கைப்பற்றியது ஆஸி.அணி




(யாசர் அரபாத்)

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுலா சென்றுள்ள பாகிஸ்தான் அணிக்கு எதிரான மூன்று போட்டிகளை கொண்ட இருபதுக்கு 20 தொடரை அவுஸ்திரேலியா அணி 2-0 என்றவாறு இலகுவாக கைப்பற்றியுள்ளது.

தொடரின் முதல் போட்டி மழைக் காரணமாக சமனிலையில் முடிந்த நிலையில், இரண்டாவது போட்டியில் அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற்று தொடரில் முன்னிலையை பெற்றிருந்தது. இந்நிலையில், தொடரை தீர்மானிக்கும் மூன்றாவது போட்டியில் அவுஸ்திரேலிய அணி பத்து விக்கட்டுக்களால் இலகுவான வெற்றியை பெற்றுக்கொண்டது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பை பாகிஸ்தான் அணிக்கு வழங்கியது. இதன்

தொடர்ச்சி பக்கம் 15

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்

Koddamunai Sports Club
Batticaloa

## BDFA இன் 2019ம் ஆண்டிற்கான தரப்படுத்தல் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் ஆரம்பம்



மட்டக்களப்பு மாவட்ட உதைபந்தாட்ட சங்கத்தால் வருடாந்தம் நடாத்தப்படும் அணிகளுக்கான தரப்படுத்தல் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகளில் 2019ம் ஆண்டிற்கான தரப்படுத்தலுக்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் 06.11.2019 அன்று ஆரம்பமானது.

மட்டக்களப்பு மாவட்ட உதைபந்தாட்ட சங்கத்தில் 2019ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட 28 கழகங்களில் தற்போது 16 கழகங்கள் A தரத்திலும் 12 கழகங்கள் B தரத்திலும் உள்ளன. A தரத்தில் தற்போது இருக்கும் கழகங்களின் விபரம் பின்வருமாறு

1.யங் ஸ்டார் விளையாட்டு கழகம்
2. டிஸ்கோ விளையாட்டு கழகம்
3.கோல்ட் பிஸ் விளையாட்டு கழகம்
4.நியு கிறீன் லைட் விளையாட்டு கழகம்
5.கதிரொளி விளையாட்டு கழகம்
6.கோட்டைமுனை விளையாட்டு கழகம்
7.விக்னேஸ்வரா விளையாட்டு கழகம்
8.சிவானந்தா விளையாட்டு கழகம்
9.ஈஸ்டன் ஸ்டார் விளையாட்டு கழகம்
10.மைக்கல்மென் விளையாட்டு கழகம்
11.பாடுமீன் விளையாட்டு கழகம்
12.Y.S.S.C
13.கடல்மீன்கள் விளையாட்டு கழகம்
14.கோபுரா விளையாட்டு கழகம்
15.சென் இக்னேசியஸ் விளையாட்டு கழகம்
16.ரெட்னம்ஸ் விளையாட்டு கழகம்

போன்ற கழகங்கள் A தரத்தில் தற்போது உள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட உதைபந்தாட்ட சங்கத்தின் செயலாளர் திரு.காந்தன் தெரிவித்தார்

## DBDTபூப்பந்தாட்ட போட்டகள் நிறைவுக்கு வந்தன




மட்டக்களப்பு மாவட்டத்தில் பூப்பந்து விளையாட்டை ஊக்குவிக்கும் நோக்குடன் உலக தமிழர் பூப்பந்தாட்ட பேரவை நடாத்திய மட்டக்களப்பு மாவட்ட பூப்பந்தாட்ட மேம்பாட்டு போட்டிகள் மட்டக்களப்பு வெபர் மைதான உள்ளக அரங்கில் ஒக்டோபர் 26,27 மற்றும் நவம்பர் 02,03ம் திகதிகளில் நடைபெற்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் பூப்பந்து போட்டியை இளையோர் மத்தியில்



ஊக்குவிக்கும் முகமாகவே இப்போட்டிகளி நடாத்தப்பட்டு வருகின்றன. இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வே.ஈஸ்வரன் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கி வைத்தது குறிப்பிடத்தக்க விடயமாகும்

# நோர்வே அனுபவங்கள்-1

## மீண்டும் மீண்டும் உயிர்க்கும் நோர்வே மக்களும் அவர்களோடு இணைந்து மீண்டும் மீண்டும் உயிர்க்கும் எம் தமிழ் மக்களும் என்றும் என் வியப்பிற்குரியவர்களே

பேராசிரியர் சி.மௌனகுரு

நோர்வே தமிழ்ச்சங்கம் அங்கு தோன்றிய பழம் சங்கங்களுள் ஒன்று. தமிழர்கள் தாம் வாழும் புலம் பெயர் நாடுகளில் தம் இருப்பை நிலை நிறுத்த எடுக்கும் முயற்சிகளுள் இதுவும் ஒன்று. இத் தமிழ்ச் சங்கம் தனது 40 ஆண்டு நிறைவுநாளை இம் மாதம் 26 ஆம் 27 ஆம் திகதிகளில் கொண் டாடியது. வழமைபோல பட்டி மன்றம், இசை, நிகழ்வு, நகைச்சுவை நாடகம், கருத்துரைகள் கௌரவிப்பு, நகைச்சுவை நாடகம், நாட்டியம், நாட்டிய



நாடகம், என்பன இரண்டு நாட்களும் நடை பெற்றன, தமிழகத்திலிருந்தும் ஈழத்திலிருந்தும் சிலரை அவர்கள் இதற்காக வரவழைத்திருந்தனர். இம்முறை அவர்கள் என்னையும் அழைத்திருந்தனர். தமிழ் சங்க விழாவில் இம்மாதம் 27 ஆம் திகதி அவர்கள் எனது சக்திபிறக்குது எனும் நாட்டிய நாடகத்தை மேடையிட்டனர். இந்நாடகத்தில் நோர்வேயில் வாழும் இசை நடன நாடகக் கலைஞர்கள் பங்கேற்றனர். இதனைத் தயாரித்த து நோர்வே தமிழ்சங்கம் இதனை நெறியாள்கை செய்தவர்கள் சர்வேந்திராவும் ரூபன் சிவராஜாவும். இருவரும் நாடகத் திறன் மிகுந்தோர். சுந்தர் கணேசன் ஜெயா ஆகியோர் இசைப்பொறுப்பை ஏற்க. தயாரிப்பு ஒருங்கிணைப்பை சாந்தா கண்ணா பொறுப்பேற்றார். நடன அமைப்பையும் ஒளியமைப்பையும் செய்தார் கலாசாதனா கலைக்கூட கவிதா லக்சுமி

அண்மைக்காலத்தில் தன் நாட்டிய நாடகங்களால் கற்பனை வளத்தாலும் அனைவரதும் கவனத்தையும் ஈர்த்தவர் இவர். இவர்கள் இணைப்பில்

27,10 2019 அன்று மாலை தமிழ்ச்சங்க 40 ஆண்டு நிறைவு விழா நிகழ்வில் ஒரு நிகழ்வாக சக்திபிறக்குது 60 நிமிட நேரம் மேடையேறியது. சில நாட்களுக்கு முன்னரேயே வந்து

இதற்கான ஆலோசனைகளும் நடிகர்க்கான பயிற்சிகளும் அளிக்குமாறு தமிழ்சங்கத்தினர் சார்பில் சஞ்சயன் இரு மாதங்களுக்கு முன்னரேயே என்னைக் கேட்டிருந்தார்.

சக்தி பிறக்குது மீண்டும் மேடையேறுவதிலும் அதன் உருவாக்கத்தில்

நான் பங்குகொள்வதிலும் மிக மகிழ்ந்தேன், முக்கியமாக இந்த இளம் தலைமுறையினருடன் இணைவதில் பெரு மகிழ்ச்சி புதிய உற்சாகம்.

இச்சக்தி பிறக்குது நாடகம் பெண்கள் யாழ்ப்பாணப் பெண்கள் ஆய்வுவட்டத்தினருடன் கலந்துரையாடி 1986 இல் எழுதப்பட்ட நாடகம். இதனை எழுதப் பண்ணியதிலும் ஆலோசனைகள் தந்ததிலும் எனது மனைவி சித்திரலேகா பெரும் சக்தியாகத் தொழிற்பட்டார். பெண்கள் ஆய்வு வட் டத்தினர் 1986 இல் யாழ்ப்பாணத்தில் முதன் முதல் உலகப்பெண்கள் தினம் கொண்டாடியபோது இந்நாடகத்தை மேடையேற்றினர் நாடகஅரங்கக் கல்லூரி சார்பிலகுழந்தை சண்முகலிங்கம் தயாரிப்பாளராயிருந்தார் நான் இதனை நெறியாள்கை செய்தேன். இசை அமைத்தார் கண்ணன்.


நாடக அரங்கக் கல்லூரியினரும் யாழ் இராமநாதன் நுண்கலைக் கல்லூரி நடன, மாணவிகளும் இணைந்த நாடகம் அது. நடன அமைப்பினை

ருக்மணி அருண்டேலிடம் நேரடியாக அடையாறு கலாசேத்திரத்தில் பயின்ற அவரது மாணவி சாந்தா பொன்னுத்துரை செய்திருந்தார். அது ஒரு காலம்.

1989 இல் இந்நாடகம் ஒஸ்லோவில் நோர்வே தமிழ் சங்கத்தில் இங்கு வாழ்ந்த சர்வேந்திராவின் நெறியாள்கையில் மேடையேறியது.

பெரும் வரவேற்பையும் அது இங்கு பெற்றது. இப்போது ஏறத்தாள 30 வருடங்களுக்குப் பின் இது இம்மாதம் 27 ஆம் திகதி ஒஸ்லோ தமிழ்சங்கதிற்காக மீண்டும் ஒஸ்லோவில் மேடையேறீயது

நோர்வே ஒஸ்லோ எனக்குப் புதிய




இடமன்று ஏலவே மூன்று முறை அங்கு வந்துள்ளேன். 2010 இல் வாசுகி ஜெயபாலனின் ஆலோசனையில் ஒஸ்லோ நுண்கலைக்கல்லூரி அழைப்பின் பேரில் வந்து ஒரு மாதம் மீண்டும் அங்கு தங்கி தமிழினி முதலானோருக்குக் கூத்துப்பழக்கிச் சென்றேன்.

2011 இல் அதே நுண்கலைக்கல்லூரி அழைப்பின் பேரில் வந்து நோர்வேயில் ஒரு மாதம் தங்கி இமயத்தை நோக்கி எனும் ஜெயபாலன் நாடகம் ஒன்றினை பிரளயன் உருவாக்க அதனை கூத்துரு நாடகமாக்க உதவினேன்.

அதற்கான கூத்துப்பயிற்சிகளை அதில் பங்கு கொண்ட இங்கு வாழ்ந்த லெபனான், பாகிஸ்தான் எரித்திரியா ஸ்கொட்லான்ட்அமெரிக்க நாட்டுக்




கலைஞர்களுக்கும் பங்கு கொண்ட நோர்வே வாழ் தமிழ்க்கலைஞருக்கும் பழக்கினேன், அதுவோர் நல்ல அனுபவம்.

மீண்டும் 2014 இல் நடன ஆசிரியை மாலதி அழைப்பில் நோர்வே வந்து

ஒரு மாதம் காலம் இங்கு தங்கி அவர்கள் நாட்டியப்பள்ளி மாணவிகளுக்குக் கூத்துரு முறையிலான மழை எனும் எனது நாட்டிய நாடகம் பழக்கி மீண்டேன். இப்போது 2019 இல் தமிழ்சங்க அழைப்பின் பேரில் 10 நாட்கள்

சக்தி பிறக்குதுவுக்கு ஆலோசனை தரச் சென்றேன். ஒக்டோபர் மாதம் 21 ஆம் திகதியிலிருந்து 5 நாட்கள் தொடர்ச்சியாக 5.00 மணியிலிருந்து இரவு 11.00 மணிவரை பயிற்சிகளில் கலந்துகொண்டேன்

2014 இல் என்னிடம் மழை நாடகம் செய்ய வந்த நடன ஆசிரியை மாலதியின் நடன மாணவிகள் அநேகமானோர்12, 13 14 வயதினர், அவர்கள் இப்போது வளர்ந்துவிட்டனர. பல துறைகளுக்கும் கற்கச் சென்றும் விட்டனர்

இப்போது இம்முறை நோர்வே தமிழ்ச்சங்கம் தயாரிக்கும் சக்தி பிறக்குது நாட்டிய நாடகத்தில் சக்தி நடனமிடும் மாணவிகள் பலர் அதே 12 13 14 வயதினர்

அக்டோபர் 21 ஆம் திகதி இச் சிறு மாணவிகளையும் முதிர் வயதிலிருந்த நடிகர்களையும்சந்தித்தேன்பயிற்சியும் உரையாடலும் நடைபெற்றன. அவர்களின் கடின உழைப்பையும் கண்டேன் பழைய நண்பர்களையும் புதிய இளம் தலைமுறையினரையும் கண்டதால் ஆனந்தம் கொண்டேன்

21.10.2019 காலை ஒஸ்லோ விமான நிலையம் வந்து இறங்கினேன் தமிழ்ச்சங்கத்தைச் சார்ந்த ஒருவர் 21 10 2019 காலை என்னை ஒஸ்லோ விமான நிலையத்தில் வரவேற்று அழைத்து வந்து கவிதா லக்சுமி வீட்டில் விட்டார். விமான நிலையத்திற்கு வெளியே வந்தபோது குளிர் சரமாக உடலைத் தாக்கியது. ஊசியாகக் குத்தியது. நோர்வேயில் குளிர்காலம் ஆரம்பமாகிவிட்டது.



பனி மழை பொழியும் கடும் குளிர் காலமும் வந்து விடும் பின்னர் ஸ்நோ வந்து எங்கும் வெள்ளை வெளேரெனக் காட்சிதரும் சூரியன் மறைந்தேவிடுவான் மக்களும் வீடுகளுக்குள் உறைந்து விடுவார்கள் சிலகாலம் செல்லப் பனிமழை நிற்கும் பனிக்காட்டிகள் உருகும் மீண்டும் தண்ணீர் நிறையும் பசுமை தோன்றும் பச்சை இலைகள் அரும்பும் வசந்தகாலம் வரும். வருடம் தோறும் வரும் இந்தக்கால மாற்றத்தையும் கடும் குளிரையும் வருடம் வென்று மீண்டும் மீண்டும் உயிர்க்கும் நோர்வேஜிய மக்களும் அவர்களோடு இணைந்து மீண்டும் மீண்டும் உயிர்க்கும் எம் தமிழ் மக்களும் என்றும் என் வியப்பிற்குரியவர்களே. அவ்வியப்பிற்குரிய எம் தமிழ் மக்களின்

இளம் தலைமுறையினருடன் எனது இந்த வயதில் மீண்டும் மீண்டும் இணையும் சந்தர்ப்பம் அளிக்கும் இயற்கைக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

# அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 52

## தரம் 11 - தமிழ்மொழியும் இலக்கியமும்

- மட்டுநகர் யுவன் -

2019இல் க.பொ.த (சா.த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு உதவும் வகையில் சென்ற வார அரங்கத்தில் 31 வினாக்கள் தரப்பட்டிருந்தன. இவ்வாரம் மீதி 9 வினாக்கள் தரப்பட்டுள்ளன. ஆக, இந்த 40 வினாக்களுக்குமான விடைகள் கீழே தரப்பட்டுள்ளன. உங்கள் விடைகளுடன் ஒப்பிட்டு உங்கள் புள்ளியைக் கணக்கிட்டுக்கொள்ளுங்கள்.

தமிழ்மொழியும் இலக்கியமும் I

| | | | |
|---|---|---|---|
| 1 – 4 | 11 – 3 | 21 – 2 | 31 – 4 |
| 2 – 1 | 12 – 4 | 22 – 3 | 32 – 1 |
| 3 – 3 | 13 – 2 | 23 – 2 | 33 – 2 |
| 4 – 2 | 14 – 1 | 24 – 4 | 34 – 3 |
| 5 – 4 | 15 – 2 | 25 – 1 | 35 – 1 |
| 6 – 1 | 16 – 1 | 26 – 4 | 36 – 4 |
| 7 – 2 | 17 – 1 | 27 – 3 | 37 – 2 |
| 8 – 2 | 18 – 4 | 28 – 2 | 38 – 3 |
| 9 – 4 | 19 – 3 | 29 – 2 | 39 – 1 |
| 10 – 1 | 20 – 1 | 30 – 1 | 40 – 2 |

•புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

32. இம்முறை நடைபெறப்போகும் தேர்தலில் சிலவேளை அவன் தோற்றாலும் …………………… இழக்காத அளவுக்கு வாக்குகளைப் பெறுவான் என்ற நம்பிக்கை இருக்கிறது.
(1) கட்டுப்பணத்தை (2) சந்தாப்பணத்தை
(3) வங்கிப்பணத்தை (4) முற்பணத்தை

33. முதுமைக்கால அல்லது பிற்காலத் தேவைகளுக்காகச் சேமித்து வைக்கப்படுவதை …………………… என்று கூறுவர்.
(1) ஓய்வூதியம் (2) எய்ப்பில் வைப்பு (3) சேமலாப நிதி (4) வட்டி

34. காணாமற்போன தன் மகனைக் கண்டுபிடித்துத் தருமாறு அம்மகனின் தந்தையார் நீதிமன்றத்தில் ………………… தாக்கல் செய்தார்.
(1) அழைப்பாணையொன்றை (2) பிடியாணையொன்றை
(3) ஆட்கொணர்வு மனுவொன்றை (4) பிரேரணையொன்றை

• வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவுசெய்க.

35. அந்தச் செடியிலுள்ள,
(1) பூக்கள் ஒவ்வொன்றும் அழகும் மணமும் கொண்டவையாக இருக்கின்றன.
(2) பூக்கள் ஒவ்வொன்றும் அழகும் மணமும் கொண்டதாக இருக்கின்றன.
(3) பூக்கள் ஒவ்வொன்றும் அழகும் மணமும் கொண்டவையாக இருக்கின்றது.
(4) பூக்கள் ஒவ்வொன்றும் அழகும் மணமும் கொண்டதாக இருக்கின்றது.

36. நிருவாகசபைக் கூட்டத்தில் ஒவ்வொரு,
(1) பிரேரணைகளும் நன்றாகப் பரிசீலிக்கப்பட்டது.
(2) பிரேரணையும் நன்றாகப் பரிசீலிக்கப்பட்டன.
(3) பிரேரணைகளும் நன்றாகப் பரிசீலிக்கப்பட்டன.
(4) பிரேரணையும் நன்றாகப் பரிசீலிக்கப்பட்டது.

• தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.

சென்றதினி மீளாது மூடரே! நீர்
எப்போதும் சென்றதையே சிந்தை செய்து
கொன்றழிக்கும் கவலையெனும் குழியில் வீழ்ந்து
குமையாதீர்! சென்றதனைக் குறித்தல் வேண்டாம்.
இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்றுநீவிர்
எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு
தின்று விளையாடி யின்புற்றிருந்து வாழ்வீர்!
தீமை யெலாம் அழிந்துபோம் திரும்பிவாரா.

37. இப்பாடலின் மூலம் கவிஞர், மனித சமூகத்துக்குச் சொல்லும் செய்தி
(1) சென்ற காலத்தை நினைத்து வாழ்தல் நிம்மதியைத் தரும்
(2) நிகழ்காலத்தை மட்டும் நினைத்து இன்பமாய் வாழுங்கள்
(3) எண்ணத்தைத் திண்ணமுற வைப்பதே சாலச் சிறந்த வழி
(4) கடந்த காலம் மனித சமூகத்துக்கொரு பாடமாகும்

38. இப்பாடலில் கவிஞர், மனித சமூகம் வாழ
(1) வாழ்த்துக் கூறுகிறார். (2) அறிவித்தல் தருகிறார்.
(3) வழி காட்டுகிறார். (4) எச்சரிக்கை செய்கிறார்.

39. இப்பாடலில் வந்துள்ள ‘குமையாதீர்’ என்பதன் பொருள்
(1) மனத்துக்குள் புழுங்குதல் (2) கவலையை நினைந்தழுதல்
(3) கடந்ததை நினைத்துப்பார்த்தல் (4) நன்மையை வேண்டிநிற்றல்

• கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கேற்ற பொருத்தமான வைப்புமுறையைத் தெரிவுசெய்க.

40. அ அவற்றிற்கும் இந்துமதச் சித்தரின் பாடல்களுக்குமிடையே நெருங்கிய ஒற்றுமையைக் காணலாம்.
ஆ இவர்கள் தமிழில் பக்தி ததும்பும் பாக்களைப் பாடிச்சென்றனர்.
இ மஜ்தான் சாகிபுப் பாடல்கள் தாயுமானவரின் பாடல்களை ஒத்திருப்பதை உதாரணமாகக் கூறலாம்.
ஈ இனிமை, சொற்சுவை, பொருட்சுவை செறிந்தனவாக இப்பாக்கள் உள்ளன.
உ தமிழ்நாட்டிலே இஸ்லாமிய ஞானிகள் பலர் வாழ்ந்தனர்.
(1) உ, ஆ, ஈ, இ, அ. (2) உ, ஆ, ஈ, அ, இ.
(3) ஈ, அ, இ, ஆ, உ. (4) ஈ, அ, இ, உ, ஆ.

தமிழ்மொழியும் இலக்கியமும் II

1. சுருக்கமான விடை எழுதுக.
(i) பின்வரும் தொடரைச் சந்திபிரித்து எழுதுக.
‘அமிழ்த மிவைவதாயினு மினிது’
(ii) ‘நாள ராவக்கி சொல்ரன். இப்ப படுப்பம்’ - இதை எழுத்து வழக்காக மாற்றி எழுதுக.
(iii) பின்வரும் வாக்கியத்துக்குப் பொருத்தமான நிறுத்தக்குறிகளையிட்டு அவ்வாக்கியத்தை மீண்டும் எழுதுக.
நாளை பரீட்சைப் பெறுபேறு வெளிவரும் என்று அதிபர் கூறினார்
(iv) ‘விழிவேல்’, ‘மனிதநதி’ - இவை என்ன அணிகள் என்பதைக் கூறுக.
(v) ‘அடிவிளக்குதல்’ என்னும் மரபுத்தொடர் குறிக்கும் பொருள் யாது?
(vi) ஒருவர் சொல்வதை நான் உடனடியாக நம்புவதில்லை என்று கூறினான் அவன். இந்த வாக்கியத்தின் எழுவாயையும் பயனிலையையும் குறிப்பிடுக.
(vii) ‘வழி’ என்னும் சொல் பெயராகவும் வினையாகவும் வரத்தக்கதாகத் தனித்தனி வாக்கியங்கள் எழுதுக.
(viii) ஒரு மாதத்தில் நான் எப்படியாவது ஒரு கவிதை எழுதுவேன். - இதைச் செயப்பாட்டுவினை வாக்கியமாக மாற்றி எழுதுக.
(ix) ‘துலாம்பரம்’ என்னும் சொல்லின் கருத்துப் புலப்படுமாறு அச்சொல்லை ஒரு வாக்கியத்தில் அமைத்துக்காட்டுக.
(x) பின்வரும் வாக்கியங்களை இணைத்து ஒரு வாக்கியமாக எழுதுக.

- நான் தினமும் நன்றாகப் படித்தேன்.
- நான் சிறந்த பெறுபேற்றைப் பெற்றேன்.

(20 புள்ளிகள்)

2. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து, ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.
(இங்கு வழிப்படுத்தப்பட்ட கட்டுரை தரப்படும்.)
(i) போதைப்பொருள் ஒழிப்பு - விளக்கக் கட்டுரை
(ii) ஒழுக்கம் உயர்வு தரும் - மேடைப் பேச்சு
(iii) போசாக்கு உணவின் அவசியம் - உரையாடல்
(iv) முன்னேற முயற்சி அவசியம் - சிறுகதை

(25 புள்ளிகள்)

3. பின்வரும் உரைநடைப் பகுதியின் சுருக்கத்தை 40 – 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக.

தற்காலத்தில் எழுந்த மேனாட்டுச் சரக்கென்று புதுமைப்பித்தனால் வர்ணிக்கப்பட்ட சிறுகதை வடிவம் ஏறகுறைய அறுபது ஆண்டுகளுக்குமுன் தமிழ் எழுத்தாளர்களின் கவனத்தைக் கவர்ந்தது. மேனாட்டுச் சிறுகதைகளையும் தமிழ்நாட்டெழுத்தாளர்களின் சிறுகதைகளையும் நோக்கி ஈழத்திலும் சிறுகதைகள் எழுந்தன. இவ்வாறு ஈழத்திற் பிறந்து வளர்ந்த சிறுகதையின் வரலாற்றை அவதானிக்கும் போது, அதனை மூன்று கட்டங்களாகப் பிரிக்கலாமென்று தோன்றுகிறது. முதலாவதை ஆரம்பகாலம் என்றும் இரண்டாவதை மறுமலர்ச்சிக் காலம் என்றும் மூன்றாவதை தேசிய விழிப்புணர்ச்சிக் காலம் என்றும் அழைக்கலாம். அவ்வக் காலகட்டங்களின் முக்கிய பண்புகளைக் கருத்திற் கொண்டு இவ்வாறு பிரித்து நோக்கப்படுகின்றதேயன்றிச் சிறுகதையின் வரலாற்றைக் கோடு கட்டி அடக்கும் எண்ணத்தில் விளைவானதல்ல இப்பகுப்பு.

மேனாடுகளிலே நிலமானியச் சமூக அமைப்பானது நிலைதளர்ந்த வேளையிலே, அதாவது சமூகத்துக்கும் தனிமனிதனுக்கும் இடையில் வந்த பாரம்பரிய உறவு புடைபெயர்ந்த போது, தோன்றிய புனைகதையின் ஒருவடிவமே சிறுகதையாகும். இவ்வாறு உதயமான சிறுகதையின் வடிவம் தமிழ் எழுத்தாளரைப் பிணித்த காலத்திலே அத்தகைய ஒரு சமூக மாற்றம் மேனாட்டளவு வேகத்திலே தமிழ்நாட்டிலோ ஈழத்திலோ ஏற்பட்டதாகக் கூறுதல் சாலாது. ஆயினும் 1930ஆம் ஆண்டையொட்டிச் சனநாயகக் கருத்துக்களும் அமைப்புக்களும் தலையெடுத்தமையையும் கல்வி வாய்ப்பு மக்களுக்குப் பெருமளவில் கிடைத்தமையையும் மத்தியதர வர்க்க வளர்ச்சியையும் விழப்பயையும் பத்திரிகைகளின் தோற்றத்தையும் கவனத்திற்கொள்ள வேண்டும்

(10 புள்ளிகள்)

4. பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து, அதன்கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

தமிழில் உணர்ச்சி ததும்ப விரிவுரையாற்றலாம் என்பதைச் செயலிலே தமிழ்நாட்வருக்கு எடுத்துக்காட்டியவரும் ஈழத்து ஆறுமுகநாவலரே. இவரின் காலத்திற்குமுன் விரிவுரை நிகழ்த்துவது, கோயில்களிற் படிக்கும் புராண இதிகாசங்களுக்கு விரிவுரை கூறுவதாகும். இவற்றைத் தவிரப் புறம்பான பொருள் ஒன்றைப்பற்றித் தமிழில் விரிவுரை ஆற்றும் வழக்கம் தமிழ்நாட்டில் இருக்கவில்லை. ஆனால் நாவலரே கிறித்தமதப் பாதிரிமாரின் ஆங்கிலச் சொற்பொழிவுகளை முன்மாதிரியாகக் கொண்டு புராண இதிகாசங்களல்லாத வேறு பொருள்பற்றி விரிவுரை ஆற்றத் தொடங்கினர். இதில் இவர் திறன்பெற்றதனாலேயே “நாவலர்” என்ற பட்டத்தினை இவருக்குச் சிறப்பாக வழங்கினர். நாவலர் இத்துறையில் ஆற்றிய பணியின் பயனாகவே தமிழ்மொழியும் மேனாட்டு மொழிகள் போல விரிவுரை ஆற்றச் சிறந்த ஒரு மொழியாக விளங்குகிறது. பிற்காலத்தில் தமிழில் விரிவுரை ஆற்றிச் சிறப்பொடு விளங்கிய அறிஞருக்கு நாவலரே வழிகாட்டினர் எனலாம்.

(i) தமிழ்நாட்டவருக்கு எந்த விதத்தில் ஆறுமுகநாவலர் முன்னோடியாக விளங்குகிறார்?
(ii) தமிழ்நாட்டில் இருக்காத வழக்கம் எது?
(iii) “நாவலர்” என்ற பட்டம் ஆறுமுகநாவலருக்கு ஏன் வழங்கப்பட்டது?
(iv) ஆறுமுகநாவலர் சிறந்த விரிவுரையாளராகத் திகழ்வதற்கு துணை செய்தது எது?
(v) ஆறுமுகநாவலரால் தமிழ்மொழிக்குக் கிடைக்கப்பெற்ற சிறப்பு யாது?

(10 புள்ளிகள்)

5. மாகாண மட்டத் தமிழ்மொழித் தினப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்ற உமது நண்பன், தேசிய மட்டத்தில் மூன்று இடங்களுக்குள் வரவில்லை. இதனால் மனமுடைந்து போனான். வெற்றிபெறாமற் போனது ஒரு சாதாரண விடயம் என்பதை எடுத்துச்சொல்லி, அவனைத் தேற்றும் விதத்தில் 100 சொற்களில் அமையுமாறு அவனுக்குக் கடிதம் ஒன்று எழுதுக. அல்லது பாடசாலை செல்லும் வயதிலே தம் பிள்ளைகளை வேலைக்கு அனுப்பும் பெற்றோருக்குக் கல்வியின் பெருமை, கல்வியின் அவசியம் முதலியவற்றை விளக்கி, பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பிவைக்கும் விதத்தில் 100 சொற்களில் அமையுமாறு துண்டுப்பிரசுரம் ஒன்று எழுதுக.

பக்க அனுசரணை

மட்டக்களப்பு,
மெதடிஸ்த மத்திய கல்லூரி பழைய மாணவர்கள் சங்கம் பிரித்தானியா.

தொடர்ச்சி...

## இருபதுக்கு 20 தொடரை...

அடிப்படையில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 106 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது.

பாகிஸ்தான் அணி சார்பாக இப்திகார் அஹமட் அதிகபட்சமாக 45 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

அவுஸ்திரேலிய அணியின் பந்துவீச்சில், கேன் ரிச்சட்சன் 3 விக்கெட்டுகளையும் மிச்சல் ஸ்டார்க் மற்றும் சீன் எபோட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி வெற்றி இலக்கை விக்கட் இழப்பின்றி 11.5 ஓவர்களில் அடைந்தது.

அவுஸ்திரேலிய அணி சார்பாக தலைவர் ஆரோன் பின்ச் 36 பந்துகளில் 52 ஓட்டங்களையும், டேவிட் வோர்னர் 35 பந்துகளில் 48 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொடுத்தனர்.

இதன் அடிப்படையில் இலங்கை அணிக்கு எதிரான T20I தொடரை 3-0 என கைப்பற்றிய அவுஸ்திரேலிய அணி பாகிஸ்தான் அணிக்கு எதிரான தொடரையும் 2-0 என கைப்பற்றி தொடர் வெற்றிகளை குவித்து வருகின்றது.

இதேவேளை அவுஸ்திரேலியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 2 போட்டிகள் கொண்ட ஐசிசி டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டிகளுக்கான டெஸ்ட் தொடர் எதிர்வரும் 21ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ச்சி...

## மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோயாளர்கள் ...

சிகிச்சை பெற்று வீடு சென்றுள்ளனர். இதில் இரண்டு பெயர் கடந்தமாதம் உயிர் இளந்துள்ளனர் இதில் குறிப்பாக ஓட்டமாவடி பிரதேசத்தில் ஒரு மரணமும் ஏறாவூர் பகுதியில் இருந்து ஒரு மரணமும் என இரண்டு மரணங்கள் பதிவாகியுள்ளதாக வைத்தியர் கலாநிதி வே.குணராஜசேகரம் தெரிவித்தார்.

இந்த வாரம் டெங்குதாக்கத்தினால் அதிகமாக பாதிப்புக்குள்ளான மட்;டக்களப்பு வைத்திய அத்தியட்சகர் பிரிவில் இதுவரை 31 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதேபோன்று பட்டிருப்பு, ஆரையம்பதி ஆகிய பகுதிகளில் தலா 9 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். மொத்தமாக கடந்த வாரம் 74 பேர் மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு தொற்றுக்கு ஆளாகியுள்ளனர்.

மட்டக்களப்பு மக்கள் சற்று விழிப்புடன் செயல்பட்டு வீடுகளில் தேங்கி கிடக்கின்ற குப்பைகள் நீர்தங்கியுள்ள இடங்கள் போன்றவற்றை அகற்றி, டெங்கு நுளம்புகள் பெருவதற்கு இடம் கொடுக்காத வகையில் கழிவுகளை அகற்ற வேண்டும் என்று மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி...

## சொல்லத் துணிந்தேன்!

வாய்மொழி மூலம் உள்ளவை நிறைவேற்றப்படாது என்பதோ இல்லை. அரசியலில் காய்நகர்த்தும் வல்லமையிலேயே காரியங்களை நிறைவேற்றிக்கொள்ளும் 'கெட்டித்தனம்' உள்ளது. அந்தக் கெட்டித்தனம் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பிடம் இல்லை.

இன்றைய அரசியல் களநிலையில் வடமாகாணத்திற்குரிய அரசியல் சமன்பாடு கிழக்கு மாகாணத் தமிழர்களுக்கு அறவே பொருந்தமாட்டாது. தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தீர்மானங்கள் யாவும் எப்போதுமே கிழக்குத் தமிழர்களின் நலன்களைக் கவனத்தில் எடுப்பதில்லை. எனவே, கிழக்கின் களநிலை அறிந்து காலத்தின் தேவை உணர்ந்து கிழக்குத் தமிழர்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் கோரிக்கையை முற்றாக நிராகரித்து தங்கள் எதிர்கால நன்மையைக் கருதி அதற்கேற்ப வாக்களிக்க வேண்டும்.

தொடர்ச்சி...

## அறிவாலயம் அறக்கட்டளை நம்பிக்கை நிதியத்தின்



இதன் தொடர்ச்சியாக அடுத்த நிகழ்வாக கிராமம்தோறும் அறநெறி வகுப்புக்களை ஆரம்பித்து கலை கலாச்சாரம் பண்பாடு விழுமியங்களையும் மாணவர்களுக்கு போதித்து நாட்டின் நற்பிரஜையாக உருவாக்குவோம் என்ற நோக்கத்துக்கு அமைவாக மிகவிரைவில் நடைமுறைப்படுத்துவதற்கு அதற்கான தயார்படுத்தல் வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதன் அடிப்படையில் அறிவாலயம் அறக்கட்டளை நம்பிக்கை நிதியம் கல்விக்கான மேம்பாட்டு வேலைகளை செய்து கொண்டுவருவதன் மூலம் பிரதேச மட்டத்தில் முன்னோடியாக திகழ்கின்றது என்பது குறிப்பிடதக்க விடயமாகும்.

இந்நிகழ்வினை அறிவாலயம் அறக்கட்டளை நம்பிக்கை நிதியம் அமைப்புதலைவர் சிவலிங்கம் தவநீதன் (சிறிராம்) செயலாளர் பரமேஸ்வரன் விஜயகுமாரி (விஜி) பொருளாளர். அலையப்போடி அற்புதமணி. மற்றும் உறுப்பினர்கள் .அத்துடன் கிராம அபிவிருத்தி சங்கம் ஆகியோர் மிகவும் சிறப்பான முறையில் முன்னெடுத்து செல்கின்றனர்.

## 'கேபிஎல். ஹொக்கி செவன்ஸ்' சுற்றுப்போட்டியில் சிவா சலஞ்சஸ் அணிவெற்றி



(காரைதீவு நிருபர்)

தித்திக்கும் தீபாவளிப் பண்டிகையையொட்டி காரைதீவு ஹொக்கி லயன்ஸ் கழகம் அமரர் திருதிருமதி அருளானந்தம் தம்பதியினரின் ஞாபகார்த்தமாக நேற்று(10) நடாத்திய 'கே.பி.எல். ஹொக்கி செவன்ஸ்' முக்கோண சுற்றுப்போட்டியில் சிவா சலஞ்சஸ் அணி வெற்றிவாகை சூடியது.

முதல் தடவையாக கடந்த தீபாவளியன்று(27) ஞாயிற்றுக்கிழமை நடாத்தப்படவிருந்த இப்போட்டி மழை காரணமாக ஒத்திவைக்கப்பட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கழகத்தலைவர் தவராசா லவன் தலைமையில் காரைதீவு விபுலாநந்த மத்தியகல்லூரி மைதானத்தில்; நடைபெற்ற இச்சுற்றுப்போட்டிக்கு பிரதமஅதிதியாக இலங்கைவங்கியின் ஓய்வுநிலை முகாமையாளர் அருளாநந்தம் மகேந்திரராஜா கலந்துசிறப்பித்தார்.

நட்சத்திரஅதிதிகளாக காரைதீவு மக்கள் வங்கிமுகாமையாளர் தி.உமாசங்கரன், உதவிக்கல்விப்பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா, விபுலாநந்தா பிரதி அதிபர்ம.சுந்தரராஜன், சிரேஸ்ட விளையாட்டாசிரியர்களான, சி.சிவபரன் ஜெ.சோபிதாஸ், க.அமிர்தபிரகாஸ் உள்ளிட்ட பல அதிதிகளும்கலந்துசிறப்பித்தனர்.

அமரர் திருதிருமதி அருளானந்தம் தம்பதியினரின் ஞாபகார்த்தமாக அவர்களது உருவப்படத்திற்கு மலர்மாலைஅணிவித்து அரவது புதல்வரால் தீபமேற்றப்பட்டு 2நிமிடநேரம் மௌனஅஞ்சலி செலுத்தப்பட்டது.

அணிக்கு 7பேர் கொண்ட இம் முக்கோண சுற்றுப்போட்டியில் சிவா சலஞ்சர்ஸ் அணி, நிமால் நைற்றைடர்ஸ் அணி, சகா சுப்பர்கிங்ஸ் அணி, ஆகிய 3ஹொக்கிஅணிகள் மோதியன. சிவா சலஞ்சஸ் முதலிடத்தையும் நிமால் நைற்றைடர்ஸ் அணி சகா சுப்பர் கிங்ஸ் அணி முறையே 2ஆம் 3ஆம்இடங்களைப்பெற்றது. வெற்றிபெற்றஅணிகளுக்கு வெற்றிக்கேடயம் வழங்கப்;பட்டது..

## பொதுநலவாய கண்காணிப்புக்குழு கோரிக்கை

ශ්‍රී ලංකා මැතිවරණ කොමිෂන් සභාව
இலங்கை தேர்தல் ஆணைக்குழு
Election Commission of Sri Lanka

அமைதியானதும் வெளிப்படைத் தன்மையுடனும் நம்பகத்தன்மையுடனுமான, ஜனாதிபதித் தேர்தலுக்கு அனைவரும் பங்குதாரர்களாக வேண்டும் என்று தேர்தல் கண்காணிப்புக் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பொதுநலவாய ஒன்றியத்தின் கண்காணிப்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொதுநலவாய நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தும் இந்தக் குழுவினர் இலங்கை வந்துள்ளனர். அரசியல் நடவடிக்கை, வாக்களிப்பு, சிவில் சமூக மற்றும் மனித உரிமைகள், நீதித்துறை போன்றவற்றில் அங்கத்துவம் வகிப்பவர்கள் தேர்தல்கள் ஆணையாளரின் அழைப்பின் பேரில் இலங்கை வந்துள்ளனர்.

தேர்தல் கடமைகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள், அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், சிவில் சமூக குழுக்கள், பொலிஸார், சர்வதேச சமூகப் பிரதிநிதிகள், பொதுமக்கள் மற்றும் சர்வதேச காண்காணிப்பு உள்ளிட்ட வாக்களிப்புக்களுடன் தொடர்புடைய சகல தரப்பினரதும் கருத்துக்களை கேட்டறிந்து கொள்ள இந்தக் குழுவினர் எதிர்ப்பார்த்துள்ளனர்.

நவம்பர் 16ஆம் திகதிக்குப் பின்னர் இந்தக் குழுவின் பிரதிநிதிகள் தமது கண்காணிப்புக்களின் அடிப்படையில், தயாரிக்கப்பட்ட உள்ளக அறிக்கையை வெளியிடவுள்ளனர்.

இறுதி அறிக்கை பொதுநலவாய நாடுகளின் பொதுச் செயலாளரிடம் கையளிக்கப்பட்டதன் பின்னர் பொதுமக்கள் அவற்றை பெற்றுக் கொள்ள முடியும். இந்தக் கண்காணிப்பாளர்கள் குழுவினர் எதிர்வரும் 22ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.




Published by Arangam News (Pvt) No 196,Trinco Road, Batticaloa and Printed at Express News Papers (Cey) Ltd